கடவுள்துணை.

தேவிகாலோத்தர

உரைபாடம்

பாயிரம்.

ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமானுை
ய திருமுகத்திற் றோன்றியதாயும உ
கோத்தரமாயும் இருக்கிற தேவிகாலோ
மென்னும் பெயரையுடைய சிவாகமத்
த்தயான ஞானத்தையும ஞானாசா
ம் போதிப்பதாயுள்ள ஞானசா
கபடலமானது காமிகாதி சிவா
பதினெட்டினும் சாராற்சாரமா ெ
சோத்த சங்கிதையாயிருக்கிற ச
ஞ சாராற்சாரமாயுள்ளது. அ
த்து எண்பத்தைந்து சுருதி
ராய்ந்து தமிழ்ச்செய்யுள் அறு
செய்யப்பட்ட தேவிகாலோத்த
பெயரையுடைய இந்தச் சாத்
இதனுரையையும் ஞானதிரு
கள் குற்றமுண்டாகில தீர

நிற்பார்கள். ஞானதிருஷ்டி யில்லாதவர்களு
க்கு இந்நூலின் நன்மை தீமை தெரியாது.
ஆகையால், அவர்களாற் சொல்லப்படும் கு
ற்றம் குற்றமாகக் கொள்ளப்படாது. இந்
நூலையும் உரையையும் பத்திபண்ணிக் கே
ட்டும் சிந்தித்தும் தெளிந்தும் நிஷ்டைகூ
டிய நின்றவர்கள் ஆணவாதி பஞ்சபாசங்க
ளையும் விட்டுநீங்கிச் சிவாநந்நிய சா
மாயுள்ள சிவசாயுச்சியத்தை அடை
ந்திருச் சந்தேகமின்று.

காப்பு.

விநாயகர் வணக்கம்

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விநாயகன் மனத்தின் முரணறவே
தல விளக்கும், அத்திவிநாயக
வித்தையியல பனித்துமழிக்க
க்கும், சத்திவிநாயகனுயாக்த
யகன் ஞேற்றந்தருமோட்ட,
ன்மதுரைச் சித்திவிநாயக
ந்தில் வைப்பாம்.

சோமசுந்தரக்கடவுள் வணக்கம்.

இருள்விளையாட் டொளிவிளையாட் டெ
ன்னவுணாத்தி மறைத்தமலத் தாடு நீங்கா, ம
ருள்விளையாட் டாருயிர்கண் மயங்காம லறி
விமேலா மகிழ்ந்து போற்றி, அருள்விளை
யாட் டெனவியப்ப வருந்தமிழ்நாட் டணி
மதுரை யதனு ளெண்ணெண், திருவிளையா
டையபிரானை செங்கமலப் பொற்பாதஞ்
சென்னி சேர்ப்பாம்.

அங்கயற்கண்ணம்மைவணக்கம்

இருளாகி வெளியாகி யிருள்வெளிக ளி
மைந்தீங்கி யெழுதா வேதம, தெருளாத பலா
யாகி திரிவிதசத்திகளாகிச் சிந்தைக் கெட
ாப, பொருளாகி நின்றபிரா னணிவெள்
ளி யம்பலத்துட் புரியா நின்ற, அருளாடல்
கண்டுவந்த வங்கயற்கண் ணம்மைபதத் தன்
பு செய்வாம்.

பாயிரம் முற்றிற்று.

நூல்.

ஸ்ரீகைலாசபதியைப் பார்வதியார் நமஸ்
காரஞ் செய்துநின்று தேவரீர் திருமுகத்தி
ல்தோன்றிய சிவாகமத்தில மோட்சவிசை

யையுடைய பக்குவ ஆன்மாககளுக்குச சிவ சாயுச்சியததுககுக காரணமாயிருககிற ஞானததையும ஞானசாரததையும வெளியிட டருளவேண்டுமென்று விண்ணபபஞ்செய தருளுகினறா:—

இதவமத.

வானவா தலைவா விந்த மன்னுயிர் முததி யெயத, ஆனவா சார ஞான மருளினு...ரு ளென றேததி, மானம ரயிலவேலொண்க ண் மணமலி குமுதச செவ்வாய்த், தேனம ா குழலா டேவன் றிருந்தடி பணிந்து சொ ன்னாள்.

(இ-ள்.) மான அமா அயில் வேல் ஒள் கண் மணமலி குமுதச செவவாய தேன் அமா குழலாள தேவன் திருந்து அடிபணிந்து ஏததி—மானபோலும நோக்கததையும் கூர்மையினால வேலையொதத ஒளிய நயனத்தையும் வாசனைநிறைந்த செவ்வாமபல்போனற சிவநத வாயையும வண்டுகள தஙகியமலரைமுடிதத கூநதலையுமுடைய உமாதேவியாா சிவபெருமானது ஸ்ரீபாததநில் நமஸ்கரிததுத துதிதது,

வானவா தலைவா!—பிரம விஷ்ணுக்கள் முதலிய தேவாகளுககெலலாம நாயகனே,

இந்த மன் உயிர் முத்தி எய்த—தீவிரம் தீவிரதர முதலான சததினிபாதத்தினலே பவித்திரமாகிய அந்தக்கரணத்தை யுடைய ராய் நித்தியராயிருக்கிற பக்குவான்மாக்கள் யாவாக்கும் ஆணவாதி பஞ்சபாச பந்த நிவ ர்த்தியின்பொருட்டு,

ஆன ஆசார ஞானம அருளினல் அருளு. என்று சொன்னுள—பசுத்துவநிவர்த்தியில விட்டு நீங்காமலிருக்கிற பதித்துவப பிராப தியாகிய சிவசாக்ஷாத்காரமாயுள்ள பரமசி வ சாயுச்சியத்தை விளக்கும ஞானத்தையு ம ஞானசாரத்தையும் கிருபையினலே அ டியேனுக்குத் திருவுளம பறறவேண்டுமெ ன்று விண்ணப்பஞ்செய்தருளினா எ-று.()

பாாவதியாராலே பிரோரிக்கப்பட்ட திரு வுளத்தை உடையவராகிய சிவபெருமான் தம்முடைய தேவியாருக்கு ஞானத்தையும் ஞானசாரத்தையும திருவாய்மலாந்தருளு கின்றார்:—

உத்தம குணத்தாய் ஞான மொழுங்கெ னு மிரண்டி ஞலே, மெய்த்தவர் முத்தி யெ ய்தும் விதியினை விரித்து ரைப்பன், இத்திற முரைத்த காலே யிதனினல் விளங்கா தாரு

க, கெத்தனை யநந்த கோடி நூலினு மினிவி ளங்கா.

(இ-ள்.) உத்தம குணத்தாய்! — விசேஷமாகிய நல்ல குணத்தை உடையாளே,

ஞானம் ஒழுங்கு எனும் இரண்டினாலே மெய்த்தவர் முத்தி எய்தும் விதியினை விரித்து உரைப்பன்—ஞானத்தினாலும் ஞானசாத்திரத்தினாலும் ஞானிகளானவர்கள் பசுபாசங்களை நீங்கிச் சிவசாயுச்சியத்தை அடைந்தற்குரிய ஞானத்தையும் ஞானசாத்திரத்தையும் விரித்துச் சொல்லுகிறோம்,

இத்திறம் உரைத்தகாலை இதனினால் விளங்காதாருக்கு எத்தனை அநந்தம் கோடி நூலினும் இனி விளங்கா—இங்ஙனஞ் சொல்லப்பட்ட காலோத்தர ஞானபோதத்தினாலே சித்தசலனம் நீங்கி விளங்காதபேருக்கு அநந்தகோடி சாத்திரபோதையினாலும் ஞானம் உண்டாகாது எ-று.

"காலோத்தரஞானம்" பரிபாககாலத்திலே உண்டாகும் ஞானம்; "காலோத்தர போதை" என்பது பரிபாககாலத்திலே உண்டாகும் ஞானத்தைப் போதிக்கிற சாத்திரம்; "அநந்தகோடி நூல்" என்பது சமயிகள் சாத்திரம். "விளங்கா" என்பதின் ஈற்றில் துவ்விகுதி விகாரத்தால் தொக்கது. (உ)

விஸ்தாரமாக மேற்சொல்லப்படும் ஞானா சாரங்களினாலே உண்டாகும் மோட்சரூப மாயிருக்கிற ஞானசாதகருடைய சொரூப த்தைத் திருவாய் மலர்ந்தருளுகின்றார்:—

கொச்சககலிப்பா.

ஆசைபய மையமாங் காரமுயிர்க கச்சமி ன்றிப், பாசம்விடல் கருணையுட னொருமை யுத்தி ஞானமுதலிக், காசைமிக வுடையார் யோகதற் பரருமாய்ப், பேசியகா லோத்தி ரத்தின் வழிநிற்பர் பெரியோரே.

(இ-ள்.) ஆசை (இன்றி) — சுத்தமாயையை அசுத்தமாயை யென்று சொல்லப்பட்ட இருவகை மாயையினுள்ள போகங்களில் ஆசையில்லாதவராய்,

பயம் (இன்றி) — அந்நிய சாத்திரங்களில் சொல்லியிருக்கிற விதிநிஷேதங்களிலே பயமில்லாதவராய்,

ஐயம் (இன்றி)—பசுசாத்திர அநுட்டானம் சிவசாத்திர அநுட்டானம் என்னும் இரண்டில் எதை விடுவோம எதைப் பற்றுவோம் என்கின்ற சங்கையில்லாதவராய்,

ஆங்காரம் (இன்றி)—யானெனதென்னும் செருக்கில்லாதவராய்.

உயிராகு அசசம இன்றி—சர்வான்மாக்க ளுக்கும பயததை உண்டாக்காதவராய்,

பாசம்விடல் (உடையர் ஆய்)—ஆணவாதி பஞசபாசங்களையும்விட்டு நீங்குதலுடையராய்,

கருணையுடன் ஒருமைபததி (உடையர் ஆய)—சாவானமாககளிடத்தும கிருபையுள்ளவராய ஞானசாததிரததில் ஒருமைப்பாட்டை உடையவராய்ச சற்குருவினிடதது ம் ஞான சாத்திரங்களினிடததும் விசுவாசம் உடையவராய்,

ஞானம் (உடையர் ஆய்)—இந்தச சாத்திரததிற் சொல்லும் ஞானம் உடையவராய,

முததிக்கு ஆசைமிக உடையரா ஆய்—மோடசததிலே மிகவும் ஆசை உடையவராய,

யோகதற பரரும் ஆய்—சிவயோகத்தில ஒருபபட்டவருமாய்,

பேசிய காலோத்தரத்தின் வழி நிற்பர் பெரியோர்—சொல்லபபட்ட காலோததர ஞானத்தைச சாதிக்கிற சாதகத்தின் வழித்தாக நிற்பர்கள் உயர்ந்தோர்கள் எ-று.

ஏ - ஈற்றசை. (ரு)

தேவிகாலோத்தர வுரையாடம்.

மோடச உபாய சாதகனுடைய பலத தின்மிகிமையை விரித்தருளிச செயகின்று ர:—

வாயுவென மறுகுகின்ற மனமடங்கும வகைதடுப்பான், ஆயவவ னரிபிரம னிநதிர ன்சண் முகன்குருவும, ஏயபல தேவதைக ள யோகிதபோதனனறிஞன, ஆயினெல் லாமுடையானு மவனணங்கு நுணங்கிடை யாய்.

(இ-ள்.) அணங்கு நுணங்கு இடையாய்! —துவளும நுண்ணிய இடையை உடையா ளே,

வாயு என மறுகுகின்ற மனம் அடங்குமவகைதடுப்பான்—வாயுவைப்போலச சஞ்ச லமாயிருக்கிற மனதடங்கும்படி தடுபபவன் யாவன்,

ஆய அவன் அரி—அவனே விட்டுணுவும்,

பிரமன்—பிரமனும,

இந்திரன்—தேவேந்திரனும்,

சண்முகன்—குமரக்கடவுளும்,

குருவும்—ஆசாரியனும்,

ஏயபலதேவதைகள்—பொருந்திய காலா க்கினி உருத்திரபுவனமுதலாக அநுசிருத

புவனமுடிவாக இருக்கிற இருநூற்றிருபத்துநாலு புவனங்களிலும உள்ள சமஸ்த தேவதைகளும,

யோகி—சத்திய ஞானநந்த ஸ்வரூபமாயிருக்கிற சிவசாயுச்சியத்தை அடைந்த சிவயோகியும்,

தபோதனன்—தவத்தைத் தனமாகவுடையவனும்,

அறிஞன்—அறிவை உடையவனும்.

ஆயின் எலலாம உடையானும் அவன்—ஆராயுமிடத்து எல்லாநன்மையு முடையவனும அவனே எ-று.

பிரமன முதலாகிய சமஸ்ததேவதைகளும் இந்தஞானசாதகனேயென்று சொல்லியது சாவாதமசொரூபமாயிருக்கிற சிவமயன் ஆகையினலென்க. இஃதன்றி, இலக்கணையாகப் பிரமன்முதலான சாவதேவதைகளினுடைய பதங்களையும் அதிலுள்ள போகங்களையும் விட்டுநீங்கிப பஞ்சகிருத்தியங்கிறகப்பாற்பட்டுச சிவசாட்சாத்காரமா யிருப்பனென்பது கருத்து. (௪)

ஞான உபாய சாதகனுடைய விசிட்டத்தைத் திருவாய்மலர்ந்தருளி, மேல்ஞானசாதகன் விசேடத்தை அருளிசசெய்கின்ருர்:—

அறிவுநிலை தவமடக்கம் புண்ணியந்தியா னங்குணங்கள், நெறியுடைய பத்தி நெறியுபா யந்நினைக்கின், மறுகுமவளி யனையமன் மடங்குவதொன் றியாததுவே, அறிவுடையோ ரிவையனைத்து மாமென்றே யுறைகுவரால்.

(இ-ள்.) மறுகுமவளி அனைய மனம் அடங்குவது ஒன்று யாது அதுவே—வாயுவைப்போலச் சஞ்சலமாயிருக்கிற மனமடங்குகைக்கு யாதொருபாயம் உண்டு அந்தவுபாயந்தானே

அறிவு நிலை தவம் அடக்கம— திரிகாலத்தையும் நிச்சயமபண்ணுகிற அறிவும் தைரியமும் தவமும் அடக்கம உடைமையும,

புண்ணியம் தியானம—புண்ணியமும் தியானமும,

குணங்கள நெறிஉடைய முத்திநெறி முத்தி உபாயம—விசேஷ குணமும் முத்திக்குக்கு (?) மிகியும சிவசாயுச்சிய மோட்சத்துக்கு உபாயமும்,

நினைக்கின் அறிவுடையோர இவை அனைத்தும் ஆம் என்றே அறைகுவர்—விசாரித்து மிடத்து அறிவுடையோர்கள் இங்ஙனம் சொல்லப்பட்ட இவ்விசேஷ குணங்களெல்

லாம் மன நிரோதநதானே ஆமென்று செ
ல்லுவர் எ-று. ஆல - அசை. (ரு)

இம மன நிரோதம பண்ணுவதே மோட்
சம; அஙஙனம பண்ணுமை பந்தம்; ஆசை
யினால மோடசததிலே ஆசையை உடைய
விவேகியானவன் இம மன நிரோத வுபாய
ததை அநுஷ்டிகக வேண்டுமென்று அருளி
சசெய்கின்றார:—

கருத்தடஙகின் முததியுது கையகலிற க
டடாகும, விரிததபொரு ளிது வென்ன வறி
வுடைய மேதககோா, திருததகுநல் லறிவா
லே சிததததைத திறம்பாமல, அருததியுட
னிலைநிறுததது மதுவறிவின் பயனாமால.

(இ-ள்.) கருதது அடங்கின் முததி அது
கை அகலின் கடடு ஆகும — மனமடஙகும
ஆயின் அதுவே சாயுசசிய மோடசமாம;
மனமு விடயஙகளிற்சென்று அடஙகாதாயி
ன் அதுவே பஞசபாச பநதமாம,

விரித்தபொருள் இது என்ன அறிவுடை
ய மேதக்கோர்—வேதாகமஙகள விரித்துச
சொல்லுமபொருள் இந்த மனநிரோதந்தா
னே என்றறிந்த அறிவுடையபெரியோர்கள்,

திருத்தத்குநல் அறிவாலே சித்தத்தைத் தி றம்பாமல அருத்தி யுடன் நிலை நிறுத்தும் அது அறிவின் பயன் ஆம—நினமலமா யிரு க்கிற நலலறிவினாலே மனத்தை அசையாம ல ஆசையுடனே அடக்கும அதுவே ஆன் மலாபமாம எ-று. ஆல - அசை. (கா)

மனநிரோத மானபிறகு அகண்டாகார சச்சிதானந்த பரிபூரணமாய விளங்குகிற ப ரமசிவ ஐக்கியத்தைப் பண்ணிககொண்டிரு க்கின்றவனே விவேகியென்று அருளிசசெ ய்கின்றார்:—

கலிவிருத்தம்.

ஒருபொரு ளெககாலத்து முளதாகிச சி றப்புடைத்தாய், இருவினை யினறிமேலா மி னபததை யளிபபதாகும, பொருவிலா வித னமேலன்பு பொருந்திடா தாருமுண்டே, திருவுலா வகன்றகலவிச சிறந்தசான் ரோ ரகடாமே.

(இ-ள.) ஒருபொருள் எககாலத்தும உ ளது ஆகி—ஒரு வஸ்து எககாலத்தும உள ளதாகி,

சிறபபு உடைத்து ஆய்—சிறப்பினையுடை யதாகி,

இருவினை இன்றி — தியானதாரணை முதலான கருமங்களிலலாததாகி,

மேலாம இனபததை அளிபபது ஆகும—நின்மலமாய் நிர்விசேஷமாய, நிராமய மாய சுயமபிரகாசமாய் இருவகை மாயையினகணை உளள இனபஙகளுககெலலா மேலாகிய பரமாநநதததைக் கொடுபபதாகிய,

பொரு இலா இதனமேல திரு உளள அகன்ற கலவிச சிறநத சான்றோாகள அனபு பொருநதிடாதாரும உண்டே—ஒபபும் உயாவும அறற இநத பரமசிவ ஐககியத்தில சிறபபினையுடைய வேதாகமஙகளையுணர்ந்த பெரியோாகளில யாநத விவேகிகள் தாம அன்புவையாதிருபபா எ-று. தாம—ஏ—அசை.()

இபபடி நிடகளமாகிய பரமசிவ ஐககியததைப பண்ணிககொண்டிருககிற ஞானசாதகனே பரமசிவ சாயுச்சியததை அடைவனென்று அருளிசசெயகின்றா:—

தூரியனுயப பொருளகளுக்குத் தூரககமிலா தொனறுகி, ஆரியமா மநுபவமா மதன்மேலன புடையவவன், காரியனும் குழன்மடவாய கருதானே யாயினும, நேசிய தூய நிததமாம பதமடைவ னெறிமையினால்.

(இ-ள்.) கார் இயலும் குழல் மடவாய்!—மேகம்போலும் அளகத்தினை உடையாளே,

பொருள்களுக்குக் காரியமா ஆய—இருவகை மாயையினுள்ள பிரபஞ்சத்துக் கெல்லாம் அதீதனாய,

துளக்கம் இலாது ஒன்று ஆகி—அசைவற்று ஒன்றாயிருப்பதாய,

தூரியம் ஆம் அருவம் ஆய அதன்மேல் அன்பு உடைய அவன்—ஆநந்த ரூபமாயச் சிவாநுபூதியாயிருக்கிற ஆநந்த பரமசிவத்தில் இரண்டற ஐக்கியத்தைப் பொருந்தியிருக்கிறவன்,

கருத்தனே ஆயினும — மோட்சத்தை அடையவேண்டுமென்று இச்சியாமல் இருந்தானே ஆயினும,

நேரியது ஆய நித்தம் ஆம் பதம் நெறிமையினால் அடைவன — அதிசூக்குமமாய் நித்தியமாயிருக்கிற சிவசாயுச்சியத்தை முறைமையால் அடைவன் எ-று.

இச்சையெல்லாந் துக்கத்துக் கேதுவாகையினாலும், விருத்தி ஞானமாகையினாலும், இச்சிக்க வேண்டுவதில்லை என்பது கருத்து. (அ)

கலாதிகண்முதலிய சர்வ வுபாதிகளோடே ங்கூடி விளங்குகிற ஆன்மாவினது விருத்தி ஞானத்தையும், சர்வ வுபாதிசூனியமாய நி ட்களமாயிருக்கிற சொரூபஞானத்தையும், அருளிச்செய்கின்றார்:—

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உருவரு வாவ தியாதென் றுரைத்திடி னகங்கா ரந்தான், மருவிய வடிவ தாகும் வடிவது மறவே விட்டால, உருவிலாச சத்தி யத்தா லுலகெலாந் தோன்ற லாலே பொரு விலாச சத்தித தியானம பொருந்திட வு ரைத்த தன்றே.

(இ-ள.) உரு அரு ஆவது யாது என்று உரைத்திடின—உருவமும் அருவமுமாயிரு ப்பது யாதென்று சொல்லுமிடத்து,

அகங்காரந்தான் மருவிய வடிவது ஆகும்—மாயையில் உண்டான கலையிலே விளங்க ப்பட்டிருக்கிற சைதன்னிய துவாரத்திலே நான் போகி நான் கர்த்தா நான் சுகி நான் துக்கியென்கிற அபிமான சொரூபத் துடனேபற்றி யகங்கரிக்கின்ற சைதன்னிய சகளமென்றும உருவமெனறுஞ் சொல்ல ப்படும்,

வழுவதும் அறவே விட்டால் உரு இச்சா சத்தி அதனால் உலகு எல்லாம் தோன்றலா லே—இங்ஙனஞ் சொல்லப்பட்ட சர்வவியாபி த்திகருமம் நீங்கினால் நிட்களமாய்ச் சித்துருப மாயிருக்கிற சத்தியென்று சொல்லப்படும் இந்தச் சத்தியால் பிரபஞ்சமெல்லாந் தோ ன்றுகையினாலே,

பொருள் இல்லாச் சத்தித்தியானம் பொருந் திட உரைத்தது—ஒப்பற்றதாயிருக்கிற விந் து சத்தித்தியானும் பொருந்தும்படி வேதா கமங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது எ-று.

சகளமாவது ஆணவாதி பஞ்சபாசங்களு டனும் பிருதிவியாதி முப்பத்தாறு தத்துவ ங்களுடனும் தத்துவகாரியமான தாத்துவி கங்களுடனும் சூக்குமை முதலான நாலு வாக்குகளுடனும் பஞ்சகோசங்களுடனுங் கூடிச் சர்வவியாபி சொரூபமாயிருக்கிற சை தன்னியமாம்; சகள மென்பது, உரு இந்தச் சர்வோபாதிகளோடுங்கூடி விளங்குகிற ஆ வி ஆன்மாவினுடைய விருத்திஞானமெ ன்று சொல்லப்படும். அன்று—ஏ—அசை. (

இனிச் சொரூபஞானமேதென்னில், இங் ஙனஞ் சொல்லப்பட்ட சர்வோபாதிகளும்

விட்டு நீங்கி நிட்களமாய்ச் சித்துருபமாயிரு
ப்பது. அதுவே மோட்சத்துக்கு விசேஷ
காரணமென்றருளிச்செய்கின்றார்:—

யானெனு மதனை நீக்கி யேகமாய் நின்ற
ஞானம், ஆனவவ் வொளியாய்த் தோன்று
மதுமுத்தி விருந்து மாதே, தேனமா கரிய
கூந்தற் செய்யவாயடப் பரந்து நீண்ட, மான
மா விழியாய் மேலாம் யோகவுந் தகமு மா
மால.

(இ-ள்.) தேன் அமர் கரிய கூந்தலுஞ் செய்
யவாயப் பரந்து நீண்ட மான் அமர் விழியா
ய—வண்டுகள் தங்கிய கறுத்த அளகத்தை
யும் செவ்வாம்பல்போன்ற வாயினையும் வி
சாலமாய் நீண்ட மான்போலும் நோக்கத்தி
னையும் உடையாளே,

யான் எனும் அதனை நீக்கி ஏகம் ஆய் நின்
ற ஞானம்—யானென் றபிமானம் பண்ணிக்
கொண்டிருக்கிற அகங்காரத்தை நீக்கி ஒன்
றாகி நிற்கின்ற ஞானமானது,

ஆன அவ்வொளியாய்த் தோன்றும்—தற்
சொரூபத்தையும் விளக்கித் தற்பதார்த்தங்
களையும் விளக்கிச் சுவயம்பிரகாசமாய் விள
ங்கும்,

அது முத்திக்குமாம் ஆகி—அந்த சொரூப ஞானந்தானே சிவசாயுச்சியத்துக்கு உத்தமமான காரணமும் ஆகி,

மேலாம் ஆம் யோகவித்தகமும் ஆம்—அந்த ஞானந்தானே மேலான சிவயோகப் பிரவிருத்தியைச் செய்விப்பதாமாம் எ-று.

“யானெனது மதனை நீக்கி யோகமாய் நின்ற ஞானம்” என்பதற்கு உதாரணம். சிவப்பிரகாசம். “பொறிபுலன் கருவியாவும் புணராமையறிவிலாமை, செறிவுறு பெறுமதிநிம்பவந்து தோன்றுமைத் தோன்றிநின்ற, சிற்பரமத்துள்ளச் செயலறுத் திடவுதிக்கும், தற்பரமாகிநிற்றல் சாக்கிராதீதந்தானே” என்பதனைக் கண்டுகொள்க. ஆல்-அசை. ( )

நிர்விசேஷமாய் நிர்க்குணமாய் நின்மலமாய் நிராமயமாய் நிட்களமாய் நிர்விகாரமாய்த் தத்துவாதீதமாய் அகண்டாகார சித்துருபமாய் விளங்குகிற ஞானம் மோட்சத்துக்கு விசிட்டகாரணம். ஆகையினாலே, இந்த ஞானத்தையே மோட்சசாதகன் சாதித்துக் கொள்ளவேண்டும். இஃதன்றி, நாம் சக்கரமுதலான சாலம்ப யோகமான சவ விகற்ப வியாபாரங்களை விடக்கடவனென்று அருளிச்செய்கிறார்:—

சக்கர நாடு சான்றோர் வழிபடுந்தெய்வ ரூப
மூலம், அக்கர மண்டலங்களை ஞானம்போ
லுழக்கின் றாரும், மக்கட்போய மாயா விசயை
மந்திரம் பிரணவம் யாமம். தொக்கஞ்சி ஞான
ஞ்சேர்ந்த தொடங்குவார் தொடங்கலாகா.

(இ-ள்.) சக்கரங்கள் ... வழிபடுந்தெய்
வம் ரூப மூலம் நாடு அக்கர மண்டலங்
கள் ஞானம்போல அழுந்து இலங்கு ஆகும்—
மூலாதார முதலான ஆதார சக்கரங்களு
ம், நாபிக்கமல இருதய கமல சகஸ்திர இதழ் முத
லான பதுமங்களும், விநாயகன் முதலான
சடாதாரமூர்த்திகளும், அகாராதி சேர்ந்த
கலையொளிகளும், சுழுமுனை முதலான நாடி
களும், நகாராதி யகாராந்தமும் அகாராதி
உகாராந்தமுமான அக்கரங்களும், மண்டலத்
திலிருக்கின்ற [illegible], இவைகளைச் சொல்லப்பட்
ட இவைகளெல்லாம் தியானிப்பது ஞானவுபாய
த்தைச் சாதிக்கிற சாதகனையடையுஞ் சிறப்பு
ப்போலச் சிறப்புடையதன்று, (ஆகையினா
லே)

மக்கள் தேய மாயா விசயை மந்திரம் பி
ரணவம் யாமம் தொக்கஞ்சி ஞானஞ்சேர்ந்த தொ
டங்குவார் தொடங்கல் ஆகா — அடக்குவா
ராயிருக்கும் வாமங்கள் பொருந்தப்பட

மாரணம தம்பனம மோகனம் ஆகருஷ ணம் உச்சாடனம வசீகரம உத்துவேஷண ம பந்தனம என்று சொல்லப்பட்ட அட்ட கன்மங்களும, அட்டகன்மங்களையுஞ் சாதிக் கிற மந்திர சமூகங்களும், பிராணாயாம முத லான யோகங்களும் ஆகிய இவைகளை நின் மலமாய நிரகுணமாய் நிர்விசேஷமாயச சித்துருபாநந்தமா யிருக்கும் ஞானத்தை அ நுட்டிப்பவர் அநுட்டிகக வேண்டுவதில்லை என்று. (கக)

பூசிக்கப்படுகிறவனும் பூசிக்கிறவனுமா யிருக்கிற பேத விவகாரமானது சச்சிதாந ந்த பரிபூரணமாயிருக்கிற சிவைக்கியம்பெ ற்ற சீவன்முத்தருக்கு வேண்டுவதிலலையெ ன்று அருளிச்செய்கின்றார்:—

மந்திரஞ் செபந் தியானம் பூசனை வணக் கம் வேண்டா; அந்த மிலாத முதநிக் குபா யமே யறிய வேண்டும, சிந்தனை புறமே செ ல்லிற் றுயரமே திரிய மீட்கின், பந்தமாந் துன்ப நீங்கிப பரமான வினபஞ் சேராவார்.

(இ-ள்.) மந்திரம் செபம தியானம் பூச னை வணக்கம் வேண்டா — ஞானசாதகருக் கு [illegible]ஞ் செபம தியானங்களும் சோட [illegible]சாரத்துடனே செய்யுஞ் சிவபூசைக

ளும் அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களு ம வேண்டுவதில்லை,

அந்தம் இலாத முத்திக்கு உபாயமே அறிய வேண்டும்—வேண்டிய தேதென்னில, அழிவில்லாத சாயுச்சியத்தை அடைவதற்கு உபாயமாகிய மனநிரோதமே அறியவேண்டும்,

சிந்தனை புறமே செல்லின் துயரமே—சித்தமானது விடயங்களிலே சென்றால் சனனமரண முதலான துக்கமே உண்டாம,

திரிய மீடகின் பந்தம் ஆம் துன்பம் நீங்கிப் பரம ஆன இன்பஞ் சேர்வார்—சித்தம புறமபோகாமல தடைபட்டால இருநூற்றிருபத்துநாலு புவனங்களிலிருக்கிற சரீரங்களிலேயுள்ள பந்தமாயிருக்கிற சனன மரணதுக்கம நீங்கிச சிவசாயுச்சியத்தை அடைவா என்று. (கஉ)

நித்தியமாய் அகண்டாகார சித்துப்பொருளாயிருக்கிற சீவன் முத்தருக்கு அநித்திய அவ்வியாபக சரீரமுதலான தோஷங்கள் இல்லையென்று அருளிசசெய்கின்றார்:-

புறனகங் கீழ்மேல் பக்கம் புண[illegible]கார பொருளு மில்லைத், திறனுடை யுரு[illegible]மல

லாந் தானாகித் தேக மின்றாய், அறன்முறை யடங்கு ஞான யோகினா லறியப் பட்ட, வி றன்மலி ஞானானந்த மேன்மையாய் விளங்கா நிற்கும்.

(இ-ள்.) புறன் (இலலை)—விபுவாய்ச் சித் துரூபாநந்தமாய் அறியப்படும் பொருளுந் தானாயிருக்கிற அவதரத்திலே புறமபே உ ள்ள சத்தாதிவிடயங்களை இலக்காகப் பற்றுவது சற்றும இல்லை,

அகம் (இல்லை)—அகங்காரத்துடனே கூடி நான் போகி நான் கர்த்தா நான் சுகி நான் துக்கி என்று அபிமானிக்கப்பட்ட அ கங்காரங்களுமில்லை,

கீழ் மேல் பக்கம் புணர்வது ஓர் பொரு ளும் இல்லை—மூலாதாரம இருதயம பிரம ரந்தரம் பக்கங்கள் ஆகிய இந்தத் தானங்க ளிலே தியானிக்க வேண்டுவதும இல்லை,

திறனுடை உருவம் எல்லாம் தான் ஆகி —மந்திரம் பதம் வன்னம புவனம் தத்துவ ம் கலை ஆகிய ஆறத்துவாவினுள்ள வடிவுக ளெல்லாந் தன்மயமாகி,

தேகம் இன்று ஆய்—சரீர மில்லையாய,

அறன் முறை அடங்கும ஞான யோகினு, ல் அறியபபடட விறலமலி ஞானநநதம் மே ன்மை ஆய் விளஙகா நிறகும—சரியை கிரி யை யோக முதிர்சசியில அடஙகிய் ஞான யோகத்தினுல அறியப்படட சசிதாநநத சிவாநந்திய சாடசாத்காரம் மேமபாடாக விளஙகாநிறகும் எ - று. (கரு)

புருடனைவன் சிவாகமத்திற சொலலப படட அளவிறந்த மூர்த்திபேதஙகளிலும, அநநிய சமயஙகளிற சொல்லப்படட மூ ாததிபேதங்களிலும், எங்கேனும் மூர்த்திக ளைப் பொருளாக நிசசயித்து ஆராதனை ப ண்ணுகிறுனே அந்தநத மூர்த்திபுவனத்தை அடைகுவன். ஆகையினுலே, மந்திராதீத மாய்ச சாவோபாதி சூனியமாய் நிராகார மாய் நிராலம்பமாயிருககிற வஸ்து ரூபத் தையே பாவிககவேண்டுமென்று அருளிச செய்கின்ருர்:—

கலிவிருத்தம்.

எந்த வாருயிர் யாதோர் பொருளினைச
சிந்தையாற பற்றிக காரியஞ் செய்திடின்
அநத யோனிய தாமென் றறிவினுல
பந்தமில் பொருள் பற்றுத றக்கதே.

(இ-ள்.) எந்த ஆர உயிர யாதுஒரு பொருளினைச் சிந்தையால பற்றிக காரியம செயதிடின—எந்தச சீவன் யாதொரு மூர்த்தியைப பொருளாக நிசசயிதது அந்தநதத் தேவதைககுககேற்ற கன்மஙகளைச செய்தாலும்,

அந்த யோனி அது ஆம் என்று அறிவினால் பந்தம் இல் பொருள் பற்றுதல தககதே—அந்தந்த மூர்த்திகள் இருககிற தானத்திலே செனிபபன் என்று கருதி, சொரூபஞானத்திலே சர்வவியாபி சூனியமாயிருககிற பரமசிவ ஐககியத்தைத நாடுதலே தகுதி எ-று.

"அந்தயோனியதாம்" என்றது, பஞசபூதமுதலாகச் சிவதத்துவமுடிவாயிருககிற முப்பததாறு தத்துவஙகளிலே எந்தெந்தத தததுவததை ஆன்மசொரூபம என்று நிசசயிததார்கள்.—அந்தந்தத தத்துவபுவனத்தில உலோகாயதன் முதல் சிவாத்துவிதியீறுகிய சமயிகளாகச செனிப்பார்கள். ஆகையினாலே, தததுவாதீதமாயிருக்கிற பரமசிவத்தையே தியானிக்ககடவர். யாதொரு சமயிகள் அந்தந்தச் சமயங்களிலே உள்ள ஆசாராநுட்டானங்களுக்கு யோக்கியமாயிருக்கிற அந்த

ந்த மூர்த்திகளுடைய பதபபிராப்தியை அ
டைவார்கள். அஃது எங்ஙனம என்னின்,
கௌளர்க்குப் பைசாசபதமும், சோதிரிடி
கள் பூாவமீமாம்சிகள. இவர்களுக்குத் தூல
மாயிருக்கிற பஞ்சபூதபுவனமும, சுமார்த்த
ர்க்கு தன்மாத்திரைபுவனமும, இந்திரிய
மே ஆன்மாவென்கிற சம்யிகளுக்கு இந்திரி
யபுவனமும், மனமே ஆன்மாவெனகிற ஞா
யவாதிகளுக்கு மனததததுவபுவனமும, அக
ஙகாரமே சைதன்னியம் என்கிற வைசேடி
கனுக்கும பிராணவாயுவே சைதன்னியம எ
ன்கிற யோகிகளுக்கும அகங்காரதத்துவபு
வனமும், புத்தன நையாயிகன் சௌத்திரா
நதிகன யோகாசாரன் வைபாடிகன்மாதத்து
மிகன் இவாகளுக்குப் புத்திதத்துவபுவனமு
ம், நிகண்டவாதிகளுப பொன்னெயில் வட்
டமும, சமணனுக்கும் சாத்துவிதகுண சை
தன்னியவாதிகளும, குணதத்துவ புனவமு
ம, பாஞ்சராத்திரிகளுப பிரகிருதி ததது
புவனமும, மாயாவாதி பாற்கரியன் நிரீசுவ
ரசாங்கியன் பாதஞ்சலியன் இவர்களுக்குப்
புருடதத்துவபுவனமும், புராணிகர்க்கு இ
ராகதத்துவ புவனமும், காபாலிகளுக்குக்
காலதத்துவபுவனமும, பாசுபதவாதி உற்ப
த்தி யாவெச சாமமியவாதி சங்கிராந்த சா

ம்மியவாதி இவர்களுக்கு மாயாதத்துவபுவ
னமும், மகாவிரதிகளுக்கு சுத்தவித்தியாபுவ
னமும், சிவபபிரயோசசியவாதி ஈசுவர வு
த்தாசினவாதி, முத்தாத்மாக்களே கர்த்தர்
என்கிற ஈசுரவாதி, இவர்களுக்கு ஈசுவர
த்துவபுவனமும், சக்திபூசை பண்ணுகிற
சாத்தேயர்க்குச் சத்தித்துவ புவனமும்,
கருடவைரவ வாமபூத தந்திரவாதிகளுக்கு
நிவிர்த்தியாதிபுவனமும், சிவசமயவாதிக்கு
ச் சிவதத்துவபுவனமும் பிராப்தியாம் என
பதறிலன்க. (கச)

இந்தச் சீவன்முத்தன் வியாபகனுயிருக்
கையினுலே சர்வத்தையும் சிருட்டிக்கிரு
னென்றும், சர்வ காரணனுயிருக்கிருனென்
று சொல்லுகிற உபசாரத்தைச் சுபாவ
மாக எண்ணிப்பாற் கரியன்முதலான சம
யிகள் சித்துத் தானே அசித்தாகப் பரிண
மிக்கும் என்கிற கருத்துக் கூடாதென்று
ஆதார நிராதார சொருபங்களை அருளிச்
செய்கின்றார்:—

கொச்சககலிப்பா.

கன்மமல மேதுமில்லைச் சுபாவமே காணு
ங்கால், தொன்மையுல குயிரில்லைத் தோன்
றுவதெல் லாமசத்து, நன்மையினைத் தோ

றுவித்துப பற்றிலதாய் நணுகரிய, தெள
ளவறிந் தானுலகு மிலதாகிச சுத்தனும்மாம.

(இ-ள்.) கன்ம பலம் எதும் இலலை—சு
த்தாசுத்தமாயா அங்குரத்துககுக் காரண
மாயிருக்கிற ஆணவமலமிலலை, கன்மத்துக
கீடாக வருகிற தநு கரண புவன போகங்
களும் இல்லை, புண்ணியபாவஙகளும் இல்லை,

சுபாவமே காணுங்கால்—ஞானக்கண்ணி
னுலே சித்துரூபமாயிருக்கிற ஆன்மசுபாவ
த்தைதயே பார்க்குமிடத்து

தொன்மை உலகு உயிர் இல்லை—பழமை
யாயிருக்கிற சாவலோகங்களும் அதிலே உ
ள்ள உயிர்களும இலலை,

தோன்றுவது எலலாம அசத்து—இருவ
கை மாயையிலே தோன்றப்பட்ட மாயா
காரியஙகள எலலாம பொயயாய் அழிந்து
போம்,

நன்மையினைத் தோற்றுவித்துப் பற்று இ
லது ஆய் நணுக அரியது என்ன அறிந்தா
ன உலகும இலதாகிச சுத்தனும ஆம—நன்
மை ஆகிய ஆதார நிராதாரயோகஙகளைப
பிரகாசிப்பித்து, மீதானமாய நிராலமபமாய்
யாவராலும் பொருந்துதற்கரியதாயிருக்கி

ய பரமசிவ ஜ[illegible]த்தை அறிந்தவன் பிரவ ஞ்சப்பற்றும் இன்றி நின்மலனாவன் எ-று ()

உலோக லௌகிகத்துக்குப் பின்னமாய் நிருபாதியாய் நிற்பதற்கு ஏது சொல்லுகின் றார்:—

நிருபாதி பரசிவந் தோற்றுங் கழுப்பட்டத் துவா க்கள், வருமாறு தோற்றுவித்த மாயையிரண் டுருவாய், ஒருவாமல் அறுவகையி னுட் புறமும் முறைப்போல், பெருஞான சிவப்பு த்தர் பிறங்குவாதிய் கறுத்தே.

(இ-ள்.) நிருபாதி பரசிவந்தான் தோற்றுவிக்கப் பட்டத்துவாக்கள்—உபாதி ரகிதமாயிருக்கிற பரமசிவனாலே விளங்காநின்ற சட்டத்துவா க்களும்,

வரும் ஆறு தோற்றுவித்த மாயை இரண் டு அரு ஆய — தோன்று முறைமையிலே தோற்றுவிப்பதற்கு உபாதான காரணமாயி ருக்கிற சுத்தமாயை அசுத்தமாயை இரண் டும் நிராகார சொரூபமாய்,

ஒருவாமல் அறுவகையின் உள் புறமும் உறல் போல்—ஒழியாமல் மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலையாயிருக்கி ற ஆறத்துவாக்குள்ளும் புறமும் ஒழிவ

ரநிறைந்து காணப்பட்டாமலுருவாய நிற்ப துபோல,

பெருஞானியர் முத்தர் நீங்கு அறுத்தே பிறங்குவார்—பேரறிவையுடைய சிவன்முத்தர்கள் ஆணவாதி சகல உபாதிகளையும் ஞானவாளாலறுத்து, ஆறத்துவாவுக்குள்ளும் புறம்பும் ஒழிவறநிறைந்து, நிராகார சுவரூபமாய் விபுவாய விளங்கா நிற்பார்கள் எ-று. (௧௬)

உபாதியுடனே கூடினவன் சிருட்டிகன்ம கர்த்துக்குள்ளே அகப்படுவனென்று திட்டாந்தமாக அருளிச்செய்கின்றார்:—

கலிவிருத்தம்.

வானம் போல வடிவில தாயெங்கும்
ஆன தாகந் தியானமபண் ணுதவன்
கானந் தன்னி லுண்டெனக் கட்டப்பட
மான மான பிறப்பிறப் பெய்துமே.

(இ-ள்.) வான்போல் வடிவு இலதாய்—சிதாகாசம்போல மகா சூனியமாய்,

எங்கும் ஆனது ஆக—பிருதிவியாதி சிவதத்துவ முடிவான தத்துவ தாத்துவிகங்களை வியாபித்துக்கொண்டு பரிச்சின்னமில்லாமல் விபுவாயிருக்கிறதாக.

தியானம் பண்ணுகிறவன்—சிவாங்கநியாசா டசாதகார பாவனை பண்ணுகிறவன்,

கூனாந்தன்வில உலண்டு என்னக் கட்டுப் பட்டு ஈனம ஆன பிறப்பு இறப்பு என்பதும் —காணகத்தில உலண்டென்னும புழுவான து நுண்ணிதாகிய நூலிழைத்துத் தானே பு றப்படப்போக வழிகாணாமல இறுகருந்த ன்மைபோல, இவனும பஞ்சபாசங்களினு ழுழைத்துத் தாத்துவிகங்களிலும் பந்தப் பட்டு ஈனமாகிய சனனமரண துக்கங்களை அடைவன் என்று.

சூனியம" என்றது நிராகார வஸ்துவை, மகாசூனியம் என்றது விந்துமாயாதி நிராகா ரவஸ்துகளை அடக்கிக்கொண்டு நிற்கிறவஸ் துவை. ஆகையினாலே, ஆணவாதி சர்வோ பாதி சூனியமாயிருக்கிற சிதாகாசத்தைப் பாவிக்கக் கடவன் என்பது கருத்து. "உல ண்டு" என்பது வீசகோசக் கிருமிக்கும ஆம். சாணகாதி விதயிலிருக்கிற கிருமிவி தையைக் கூடாக்கிக்கொண்டு அதிற சிறிது புசித்து மற்றதையும மேற்புசிப்போமென்றி ருக்கும். விதைவிதைக்கிற காலத்தில அந்த விதையை நனைத்தபோது அக்கினி வாயு த ண்ணீர் இவற்றின் யோகத்தால் மரித்து, மி

ளதும அந்நிய நிலைங்களோது அதனுட னே உடம்பு நதியாய மாயந்து, இவவாறு [illegible] டைவிடாமல் [illegible] காலம [illegible] ணைப்பட்ட [illegible] அதுபோல [illegible] பாசம் [illegible] ணை [illegible] படும் [illegible] [illegible]. [illegible]. (கஎ)

[illegible] த்தால் துக்க [illegible] மென [illegible], நக்க நிவாத்தியின்பொருட்டு [illegible] தை ஆதரிக்க வேண்டுமென்று அருளிச்செய்கின்றார்:—

[illegible] மெய்ப்பிறப் [illegible] யும்
அ [illegible] தருந்துயராதலால
[illegible] பெறுந்தம பொருட்டாந்த
நாய ஞான [illegible] தொடல்வதே.

([illegible]) [illegible] ஆயிரும் — விருநோனக
[illegible] காலமொன்று [illegible] காலல
[illegible] மாசமா
[illegible],

[illegible] — எ [illegible] து [illegible]
[illegible] ஸ எநதெ
[illegible] ஆய,

அ [illegible] அந்து நுயர் ஆதலால —
அ [illegible] ஜெனிக்கு மிடங்கனி
லே ஆவது அரிய துயரமே ஆதலால,

தீய துன்பம் செறுத்தல் பொருட்டு—பொல்லாத துன்பங்களையெல்லாங் கெடுப் பது நிமித்தமாக,

அந்தத் தூயஞானச் சுடரைத் தொடர்வ ர்—நின்மல ஞான சொரூபமாயிருக்கிற அந் தப் பரமசிவ ஐக்கியத்தையே பொருந்து வார் எ-று. ஏ-ஈற்றசை. (௧௮)

உபாதியோடு கூடினதாகச் சொல்லப் பட்ட சரியை கிரியை யோகங்களை விட்டுச் சனுமாந்திரங்களிற் சிவாகமங்களிற் சொன் னபடியே அநுட்டித்ததனால் ஞானத்தைப் பொருந்தினவன் அச்சரியை கிரியை யோ கங்களைவிட்டுப் பரமசிவ பாவனையே பண் ணிக்கொண்டிருக்கக் கடவனென்று அருளிச் செய்கின்றார்:—

௧௯ வேறு.

கருமமுஞ் சரியையுங் கழற்றப் பட்டதவ
வருமைசேர் ஞானத்தை யுடையவ ராதலால
இருமையி லியோகமு மெய்த பிழையியே
திருமலி பரம்பொரு ளனைச் சிந்திப்பார்.

(இ-ள்.) கழற்றப் பட்டது சரியையும் கரு மமும் அவ் வருமை சேர் ஞானத்தை யு டைவர் ஆதலால்—சொல்லப்பட்ட சரியை கிரியா யோகங்களை அநுட்டிக்கிறவர்கள் ம-

லவாம் நிர்விசேஷமாயப் பெறுதற் கரிதாயி ருக்கிற ஞானத்தைப பொருந்துவா, ஆகை யினலெ,

இருமை இல யோகமும எயதல் இன்றி —பிராணயா மாதிகளோடுங் கூடியிருக்கிற சாலமப யோகத்தைத்விட்டு,

திருமலி பாமபொருள் தன்னைச சிந்திப பார் —சகளம சகள நிட்கள மென்று சொ லலப்பட்ட சொரூபங்களுக்கெல்லாம மே லுகிசச சச்சிதாநந்த பரிபூரண பரமசிவ பா வனையே பண்ணுவார்கள் எ-று.

“சரியை” ஆவது சிவாலயந்திருவலகிடுத ல, திருமெழுகிடுதல, திருநந்தனவனை முண் டாக்குதல, திருப்பணிசெய்தல், திருவிளக் கிடுதல், திருமாலை திருவாபரணம் திருமேற் பூச்சு திருமஞ்சனம திருக்கோயில் நியமம சிவதுதி சிவனடியார்க் கேவல் இவைமுதலி யன செய்தல ஆம. கிரியை ஆவது கிரியா பாதத்திற சொல்லப்பட டிருக்கிறமந்திரோ ச்சாரணம பூசை செபம சமயம் விசேடம நிருவாணம ஆசாரியா பிடேகம சாத காபி டேகம் சரிசம லோகதனமணி சிவதன்ம ணி பவுதிக நயிட்டிகாதி அநுட்டானங்கள் இவை முதலியனவற்றை ஞானோபத்தி நி

பித்தமாகச் செய்வது. இவை காமிகாகம முதலாக வாதுளாகம முடிவாக இருபத்தெட்டிந் திவ்வியாக மத்திலும் அநுக்கிரகம் பண்ணுவோர் அநுக்கிரகம் பண்ணப் படுவோர் ஆகிய இவர்கள் தாரதம்மியத்துக் கேடாகச் சிவபெருமானால் திருவாய் மலர்ந் தருளப்பட்டன. அவ்வருமை சேர் ஞானத்தை யடைவதென்றது. அருமையாத அடையும் அவ்வகண்டாகார சச்சிதானந்த சிவாநந்திய சாட்சாத்கார ஞானம் விளங்கும் பொருட்டு ஆதலால், இருமையின் யோகமுமெய்தலென்றது. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதியென்று சொல்லப்பட்ட அட்டாங்க யோகங்களே, இஃது அணிமா ஆதியா யிருக்கிற அட்டமா சித்திகளுக்குக் காரணமாயிருக்கும் எனக. (௧௯)

சுத்தமாயை அசுத்தமாயையி லுள்ள போகங்களில் ஆசைவிட்டா லொழிய நிராலம்ப யோகங் கூடாதென்று அருளிச் செய்கின்றார்:—

ஷை வேறு.

சத்தி யாதலந் தான்முத லீறதா
வைத்த வைய மெலாமசத் தாதலால்

மெய்த்த ஞானத்தி லிவை விட்டவா
அத்த மாகிய சூனிய வாதிகள்.

(இ-ள்.) பாதலம் முதல் சத்தி ஈறாது ஆ
வைத்த வையம் எல்லாம் அசத்து ஆதலால்
—காலாக்கினி ருத்திர புவன முதலாகச் ச
த்தித்தத்துவ முடிவிலிருக்கிற அநாசிருத பு
வனம் ஈறாக இருநூற்றிருபத்துநாலு புவன
ங்களும் மூன்றாகக் கொண்டு விசேஷமாயச்
சுத்தமும் அசுத்தமும் சுத்தாசுத்தமுமா யி
ருக்கிற போகங்கள் : நாசத்துக்கு கேதுவாய அ
நித்தியமா யிருக்கையினாலே,

மெய்த்த ஞானத்தில் இவை விட்டவ
ர—உண்மையாகிய சிவஞானத்தினால் இங்
ஙனஞ் சொல்லப்பட்ட பிரபஞ்ச உபாதி
யெல்லாம் விட்டு நீங்கினவர்கள்.

அத்தம் ஆகிய சூனியவாதிகள்—நின்மல
மாயிருக்கிற சாட்சாத் காரத்தை அறிந்தவ
ர்கள் எ-று.

சூனிய மென்றது சிருட்டி முதலான நா
ன்கு கிருத்தியங்களும் இல்லாததாய் அநுக்
கிரகம் பண்ணுகிற சொரூபமாய நிராகார
மாய சர்வோபாதிசூனியமாயிருக்கிற சிவ
த்தை என அறிக. தான்-அசை. (௨0)

சித்தசலனம போகததிற பறறுநலுக்கே துவென்று திடடாநதமாகச சொலலுமிட்டது நிராலமபத்தில நிசசலனமாயிருககிற மனந்தானே மோட்சததை அடைவதற்கு யோக்கியமென்று அருளிசசெய்கினறார்:—

அறசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம.

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போறச ரித்துத், திரியுமச் சித்தந் தன்னை திருத்திச சூனியததே நின்றால, மருவிரே ரா பிரித லின்றி வானவ ரறிவுக கெட்டாப, பொருவிலா நித்த சுத்தப் பொருளினை ய டைவ ரனறே.

(இ-ள்.) மருவிய பொருள்மேல் அன்பு ஆய் — திவ்வியமா யிருக்கிற சததாசுதத போகங்களிற் பற்றுதலாய்,

வானரம்போல்—மிகவும ரசததை யுடையதாய்ப் பக்குவமாய்ப் பழுதத பழங்களையுடைய சாகையில் தொஙகி இடை விடாம ல் ஒன்றைவிட் டொனறைப பற்றிககொண்டு உதாரக்கினியினால வருததபபடுகிற வானரம்போல,

சரித்துத திரியும் அசசிததந்தன்னைத திருத்திச் சூனியததே நின்றால்—முன்சொன்ன சுத்தமாயை அசுத்தமாயா போகங்களிலே

பற்றியிருக்கிற ஆசையினாலே பரபரப்பாய்ச் செல்லுகின்ற சித்தத்தை மீட்டுச் சர்வோ பாதி சூனியமாய்ச் சச்சிதாநந்த பரிபூர ணமாய் விளங்குஞ் சிவத்திலே நிலைபெறப் பண்ணினால்,

மருவினோர் பிரிதல் இன்றி வானவர் அறி வுக்கு எட்டாப பொரு இலா நித்த சுத்தப பெருளினை அடைவர்—அங்ஙனம் பொரு ந்தினவர்கள் பிரிவற்றதாய்த் தேவர்கள் அறி வுக்கு எட்டாததாய் உவமையில்லாததாய் நித்தியசுத்தமா யிருக்கிற் சிவ சாயுச்சியத் தை அடைவர்கள் எ-று.

சித்தமென்பது பஞ்சபாசங்களை நீக்கி நி ன்மலமாயிருக்கிற ஆன்மசைதன்னியத்தை என்றறிக. (உ-ம்.) திருவாசகம். "புத்தம் முதலாய புல்லறிவிற் பலசமயந், தத்தம த ங்களிற் றடுமாறுபடப் படுகிற்கச, சித்தஞ் சிவமாகச் செய்தனவே தவமாகக், மத்த ன கருணையினுற றோணக்க மாடாமோ" என்பதனாற் கண்டுகொள்க. அன்று - ஏ- அசை. (உக)

. பரமசிவ சாயுச்சியத்துக்கு யோக்கியமா யிருக்கிற ஆன்மாவினுடைய சுபாவசொரூ பத்தை அருளிச்செய்த பின்பு தத்துவ தா

துவிகங்களுடனே கூடி அதோமுகமாயிருக்கிற வியாபாரத்தை ஒழிந்தவன், சொசதுருபலாபகாலத்துக்கு மேலாயடையப்பட்ட ஞானத்தினாலே, நிருபாதியாய நிர்விசேஷமாயச் சிறகனமாயிருக்கிற பரவஸ்து தெரிசனத்தால் அடைந்த தன்னுடைய சுகத்தை உடையவனென்று அருளிச்செய்கின்றார்:—

மேலாய வின்ப மாகி விண்போலு ளுறம்பு தாகிக், காலாகித் தத்துவங்கள் கலவாது காய மின்றி, மூலாய கரண மின்றி யறிவாகி யெங்குங் காணும், சீலாய ஞானஞ் சேர்ந்தோர் திரியா வாநந்தி யாவார்.

(இ-ள்.) கால் ஆதித் தத்துவங்கள் கலவாது காயம் இன்றி மால் ஆய கரணம் இன்றி அறிவாகி எங்கும் காணும — சுத்தாவத்தையை அடைந்தவனது சைதன்னியமானது காலமுதலான தத்துவ தாத்துவிகங்களுடனே கூடாததாய்த் தூலசூக்கும சரீரங்களுமில்லாததாய்ச் சூக்கும சரீரத்துடனே கூடி நானென்கிற சங்கற்ப விகற்ப சமூகமாகிய கரணங்களும் இல்லாததாய்ச் சித்துருபமாய எல்லாவற்றையும் காண்பதாயிருக்கும்,

விண்போல் உள் புறம்பது ஆகி—ஆகாசமானது கடபடாதி முதலான வஸ்துகளிலே

உள்ளும் புறமும் வியாபித்திருப்பதுபோ லச் சடாந்துவாக்களிலே உள்ளும் புறமு ம் வியாபித்திருப்பதாய்,

மேலாய இன்பம் ஆகி—நாத விந்துவாதி ரூபாகிதமாய இந்த ஆநந்தத்துக்கு மேலா ய நிரதிசயாநந்த ரூபமாய இருக்கிற பரம சிவரூபத்தை,

மேலாய ஞானம் சேர்ந்தோர் திரியா ஆந ந்தி யாவார்—மேலான ஞானக் கண்ணி னாலே சாட்சாத்காரம் பண்ணினவர்கள் வி டுநீங்காத பரமாநந்த போகத்தை உடை யவராவார் என்று. (௨௨)

மனோலயமா முறைமையைத் திருட்டாந் தமாக அருளிச்செய்கின்றார்:—

கலிவிருத்தம்.

மூண்டு பற்றி முழுங்கி யெழுங்கனல்
ஈண்டு காட்ட மிலதே யிலதாகும்
தீண்டு மப்பொருளின்றெனிற சித்தமும்
மாண்டு தோற்ற மிலதாய மடிந்திடும்.

(இ-ள்.) மூண்டு பற்றி முழுங்கி எழும் க னல் ஈண்டு காட்டம் இலதேல் இலது ஆகு ம்—மூண்டு விறகிலேபற்றி ஆரவாரித்தோ ங்கிய அக்கினியினிடத்து விறகில்லா விட

ால அந்த அகங்கிருதானே அவித்யம, (அதுபோல)

மீண்டும் அப்பொருள் இன்று எனில் சித்தமும் மீண்டு தோற்றம் இலது ஆய மாய்ந்து இறும—சிவாநந்திய ஐக்கியத்தை அடைந்து சிவமேயாயிருக்கிற சீவன் முத்தனுக்குப் பிரபஞ்ச விடயமில்லாமையினாலே மனம் தானே லயமாம் எ-று. (௨௫)

அநாதியாகிய ஆணவசத்தியோடு கூடியிருக்கிற ஆன்மாவினது விருத்தி ஞானம் விளங்காதபடி மறைப்பின்கண் உண்டான குணத்திரைய சொரூபமான சுழுத்தியாதி அவத்தைகளின் கூட்டங்களுக்கு வேறாகக் கொண்டிருப்பதே யோக்கியமென்று அருளிச்செய்கின்றார்:—

மோக மூர்ச்சிகை மாயை முதற்கண
வாய சாக்கிர மல்லாச சுழுத்தியும
ஏய வெண்ணு மவத்தைக ளியாவையும்
வீய நோற்பவர் வீடு விடாதவர்.

(இ-ள்.) மோகம்—இருவகை மாயையின்கணுள்ள போகங்களிற் பற்றும்,

மாயை—அநான்மாவாயிருக்கிற தேகேந்திரியமனம் புத்தி ஆங்காரம் சித்தமுதலான மாயாகாரியங்களை ஆன்மாவென்று அபி

மரணிப்பது அவாவியும், பஞ்சபூத பரிணாம விகாரரூபமாகிய தேகதன்மத்தையும, இந்திரிய தன்மத்தையும, அந்தக்கரண தன்மத்தையும, குணத்திரய தன்மத்தையும், பிராணவாயு முதலான வாயுக்களின் தன்மத்தையும, சுகதுக்க மோகாதியாயிருக்கிற புத்திதன்மத்தையும, ஆன்மதன்மமென மரோபிப்பதாகிய மாயையையும,

ஆய சாக்கிரம்—சோத்திராதி இந்திரியத் துவாரத்திற் பிரவேசித்து விடயங்களிற் பற்றப்பட்ட மனத்தோடு கூடியிருக்கிற சாக்கிராவத்தையும,

முதல் கனவு—சாக்கிராவத்தையி லனுபவித்த அர்த்தங்களை நினைக்கும் அந்தக்கரண வியாபாரமாயிருக்கிற சொப்பனமும்,

அல்லாச் சுழுத்தியும்—தாமத குணத்தால் நிரோதிக்கப்பட்டிருக்கும மனோரூபமாகிய சுழுத்தியும,

மூர்ச்சிகை—ஆன்ம சைதன்னியத்தை நிரோதித்து மூர்ச்சையைப் பண்ணு நிற்கும் மலசத்தியி லுலவரும் கீழாலவத்தையில் அதீதமும துரியமும,

ஏய எண்ணும அவத்தைகள் யாவையும் வீய நோற்பவர் வீடு விடாதவர்—இங்ங

னும் சொல்லப்பட்ட கீழாலவத்தை ஐந்து
ம், மத்தியாலவத்தை ஐந்தும், உணர்த்து
முறைமையாகிய சகலாவத்தை ஐந்தும் எ
ன்று சொல்லப்பட்ட அவத்தைகளெல்லா
ம் கெடும்படி, சச்சிதானந்த சிவானந்நிய சா
ட்சாத்கார ஐக்கியத்தை அநுசந்தானம் ப
ண்ணிக்கொண்டிருக்கும் சீவன்முத்தரே ப
ரமசிவ சாயுச்சியத்தை அடைவர் எ-று.

கீழாலவத்தை ஐந்தும், மத்தியாலவத்
தை ஐந்தும் வருமாறு.—கேவலத்திற் சாக்
கிரம் கேவலத்திற் சொப்பனம், கேவலத்
திற் சுழுத்தி, கேவலத்தில் துரியம், கேவல
த்தில் துரியாதீதம் என்னும் இவைகளில்,
கேவலத்தில் சாக்கிரமாவது—ஆன்மா முப்
பத்தாறு தத்துவங்களுடனும் தாத்துவிகங்
களுடனுங்கூடச் சகலவிடயபோகங்களையும்
அநுபவித்துக்கொண்டிருக்கும் அவசரத்தி
ல் போக ஏதுவால் கன்மமில்லாதிருக்கை
யால் பிரேரககாண்டமாகிய சுத்தத்தத்துவங்
கள் ஐந்தும், போககாண்டமாகிய கலாதிக
ள் ஏழும் நீங்கச் சோத்திரந் தொக்கு சட்சு
சிங்குவை ஆக்கிராணமென்னும் ஞானேந்
திரியம் ஐந்தும், வாக்குப் பாதம் பாணி பா
யுரு உபத்தமென்னும் கன்மேந்திரியம் ஐந்
தும், சத்த பரிச ரூப ரச கந்தமென்னும் த

ன்மாத்திரிகள் ஐந்தும், வசன கமன தான
விசாகசமானந்தமென்னுமத்தாத்துவிகமாகிய
வசனாதி ஐந்தும, பிராணனை அபானன் சமா
னன வியானன உதானன நாகன் கூர்மன் கி
ரிகரன தேவதத்தன் தனஞ்சய னென்னும
தாத்துவிகவாயுக்கள பத்தும, மனம் புத்தி
ஆங்காரம சித்தமென்னும் அந்தக்கரணங்க
ள நானகும, ஆகிய இந்த முப்பத்துநான்கு
கருவிகளுடனே க்ஷேத்திரக்கியனாகிய ஆன
மாவுங்கூடி முப்பத்தஞ்சாயச சாக்கிரத்தா
னமாகிய லலாடத்திலநின்று பிரேரிக்கிற த
த்துவமும, புசிப்பிக்கிற தத்துவமும், தாரக
மாகிய பூதங்களும நீங்குகையால ஆணவமே
விட்டுக கண்டுங்காணுமல கேட்டுங்கேளாம
ல் மயங்கியிருக்கும அவத்தம; தேவலத்தில
சொப்பனம, புறத்தில விடயங்களைக்கிரகிக்
கும் ஞானேந்திரியமைந்தும, கன்மேந்திரிய
மைந்தும ஆகப்பத்துமநீங்க, நின்ற சத்தாதி
ஐந்தும், வசனாதிஐந்தும, பிராணுதிபத்தும்,
மனாதிநான்கும, ஆக இருபத்து நான்குடனு
ம், க்ஷேத்திரக்கியனுங்கூட இருபத்தஞ்சா
ய்க் கண்டத்தானத்தில் நின்று சாக்கிரத்தி
ல் அனுபவித்த போகத்தில நினைவும், தற்
காலத்திலவரும சூக்குமதேக போகமாகிய
ஆனைமெயறிமாலை சூடுதல முதலானவறறை

நுபவிப்பது; கேவலத்திற் சுழுத்தி, சொ
ப்பன வத்தையிற் கூடியிருந்த இருபத்து
நான்கு. கருவியில் வாயுக்களிற் பிராண
வாயுவும், அந்தக் கரணங்களிற் சித்தமும
நீக்க, மற்ற இருபத்திரண்டுமநீங்க அவ்விர
ண்டுடனே க்ஷேத்திரக்கியனுங்கூடி இருதய
த்தில் நின்று சுகமாகத் தூங்குவது; கேவல
த்தில் துரியம், இந்தச் சித்தமுநீங்க உசுவா
ம நிசுவாசம பண்ணிக்கொண்டு தேகத்துக
குக் காவலாகஇருக்கும் பிராண வாயுவுட
னேகூடி நாபித்தானத்தில் நின்று ஒன்றுந
தெரியாமல் தூங்குவது; கேவலத்தில் துரி
யாதீதம், பிராணவாயு நாபித்தானத்தில் நிற
க்க க்ஷேத்திரக்கியனாகிய ஆன்மாவொன்றுந
தனித்து மூலாதாரத்திலே ஆணவ மலத்து
டனேகூடி ஒரறிவுமின்றி வியாபியாயிருப்ப
து; அந்த அதிகாரத்தைத்தானே நித்திய கே
வலாவத்தை; இதற்கே நிராலவத்தையென
றும்பெயர்; இனிச் சகலத்தில் மத்தியாலவ
த்தை வருமாறு லலாடத்தில்நின்று ஆன்மா
சகலவிடயங்களையும் அநுபவிக்கும் அவத்தா
த்தில் கலவெறிகல முதலானவைகளாலே
னும், புத்திர முதலானவர்களின் மரணம
கேட்டது முதலானவைகளாலேனும், திடுக
கிட்ட பிராணவாயுவும சீவியாமல் ஒன்றை

அறிந்தும்அறியாமலமூர்ச்சித்துமயங்கிநின்
ற அவத்தை சாக்கிரத்தில அதீதம, ஆன்மாவு
ம பிராணவாயுவும நீவித்துப பெருமூச்செ
றிந்து நின்ற அவத்தை சாக்கிரத்திற் றுரிய
ம, சித்தம பிராணவாயு இவற்றுடன் கூடி
த துக்கமாத்திரமாய நிறபது சாக்கிரத்திற்
சுழுத்தி, இருபத்து நான்குதத்துவங்களுட
னே க்ஷேத்திரக்கியனுங்கூடி இருபத்தைந்
தாயத் துக்கம இதனால வந்ததெனனுஞ் சிந்
தையுடனே துக்கத்தை அநுபவிப்பது சாக்
கிரத்திற் சொப்பனம, தத்துவ தாத்துவிக
மெல்லாவற்றுடனுங்கூடிச சகல விடயங்க
ளையும அநுபவிப்பது சாக்கிரத்திற் சாக்கிர
ம, இதுவே சகலாவத்தை எனவறிக. (உச)

நிருவிகற்பமாகிய சுத்தாவத்தையை அ
டைந்து சஞ்சரிக்கும் சீவன் முத்தனுக்கு
ப பிராவிருத்தி நிவிர்த்தியாதி பரமபரையாக
உபாதியோடு கூடியிருக்கிற சரீராதிகளுக்
குப் பின்னமாய் முன்சொன்ன கேவலசக
லாவத்தைகளையுமநீங்கிச சுத்தாவத்தையில்
அசைவற நின்றபோது, சொசசொரூபம
விளங்குமென்று அருளிசசெய்கின்றார்:—

உடம்பிரண்டு முயிர்ப்புட னுள்ளமும்
மடம்ப டும்மகங் காரமும் புந்தியும்

இடம்படத் தன்னில வேறெனச் சிந்திப்பான்
உடம்பிலா ஞான வுளவொளி யுளனாகும்.

(இ-ள்.) உடம்பு இரண்டு—தூலசரீரமு
ம் சூக்குமசரீரமும,

உயிர்ப்புடன் உள்ளமும — பிராணவாயு
வும் சித்தமும,

மடம் படும் புந்தியும் அகங்காரமும—இடை
டைய நிச்சய சொரூபமாய்ப் போகியமான
மான் புத்தியும் புத்தியைக் கிரகிக்க வேண்
டுமென்பதிற் கருவியாகிய யானென்னுமிதனை
னும் அகங்காரமும,

இடம்பட்ட தன்னில வேறு எனச் சிந்திப்
பான் உடம்பு இலா ஞான உள் ஒளி உள
னாகும்—இங்ஙனம் சொல்லப்பட்ட தத்துவ
ங்களை யெல்லாம் இடமாகத் தனக்கு அந்நிய
மாக யாவனொருவன் சிந்தித்து நீங்குகிறா
னோ அவனுக்குத் தேகாதி சாவோபாதி ர
கிதமாயிருக்கிற சொரூப ஞானம் வி
ளங்கும் எ-று. (௨௫)

தத்துவங்களுக்குப் பின்னாய்ப் பிரகாச
மாய விழிகளைப்படுச் சுத்தமாய்ச் சித்து
ருபனாய்த் திரோதானமாகிய நித்திராவத்
தையும், உணர்த்து முறைமையதாகிய சாக

கிரியாவத்தையு முதலிய உபாதிகளோடுங்
கூடிய கேவல சகல நீங்கி, சுத்தாவத்தையில்
நிற்கும் ஞான சாதகனுக்கே ஞானசித்தி
யாமென்று அருளிச்செய்கின்றார்:—

வெண்பா.

திருத்தகு சமாதியைச் செய்யுங் காலத்
தும், கருத்தெழுந் தடங்காது கலங்கு மாயி
னும், வருத்தமா நித்திரை மருவு மாயினு
ம், நிரித்தறி வுறுத்துத் தன் னிலையிற் சேர்
க்கவே.

(இ-ள்.) திருத்தகு சமாதியைச் செய்யு
ம் காலத்து —சிறப்பினையுடைய சிவானந்தம
யமாயிருக்கும் சமாதியை அநுசந்தானம் ப
ண்ணிக்கொண்டிருக்கும்போது,

கருத்து எழுந்து அடங்காது கலங்கும்
ஆயினும் —பூர்வ வாசனையினாலே கலை முத
லான தத்துவங்களுடனே கூடி மனமானது
அடங்காமற் கலங்கினாலும்,

வருத்தமா நித்திரை மருவும் ஆயினும்
—சரீர வருத்தங்களினாலே அதீதாவத்தை
வந்து பொருந்துமாயினும்,

நிரித்து அறிவுறுத்துத் தன் நிலையில் சே
ர்க்கவே—இங்ஙனம் சொல்லப்பட்ட சக்தி

சாதிகளில் போகது செல்லாமல் பிரயாசப்
பட்டாயினும் திருப்பிச் சிந்நகத்த சிவாநந்
திய சாட்சாத்காரமாகிய சுத்தாவத்தையில்
பற்றுதலைச் செய்து சிவமாயே இருக்கக்கட
வன் எ-று. (உ௯)

பிரியாமல் ஒருவிடங்களிலே பற்றுதலும்,
தன்னிடத்திலே நான் இலயமாயிருத்தலும்,
சற்றே விடயங்களில் பற்றுதலும் விடுதலு
ம் ஆகப் பலசாலுஞ் சஞ்சரித்தலும் ஆகிய
வியாபாரங்களால் சங்கிலிட்டமனம், கெதா
கெதிமனம், விட்சித்தமனம், சொலினமனம்
என் நான்காம். இவற்றுள், சங்கிலிட்ட
மனமாவது மந்தம், மௌனம், மந்தவியம்
என்னும் மூன்றுவிதமும் இல்லாததாய, அ
நந்திய சொரூபமாய, குறைந்தமாய, தன்னு
லே பற்றப்பட்டு அநுபூதியாயிருப்பதாய,
விடயங்களிலேபற்றுதாய, நேயத்திலே நி
சசல சொரூபமாய, சாத்துவிககுண ரூபமா
யிருப்பது. கெதாகெதி மனமாவது வியா
பார ஞானவஞ்ஞான சொரூபமாய், இராசத
குண சொரூபமாய், பற்றுதலும் விடுதலுமா
க விடயங்களிலே சஞ்சரிப்பது. விட்சித்த
மனம் விடயபோக நிமித்தமாகத் திரிகால
வியாபல சொரூபமாய, தமோகுணரூபமா

யிருப்பது, சொலினமனமாவது பிரவனுச
த்திலும் சுத்தாவத்தையிலும செல்லாமல
அடங்கியிருப்பது. உத்தமம், மத்திமம், அ
தமம, அதமாதமம் ஆகிய இந்நான்குவித
மனோவியாபாரங்களுக்குள்ளே சங்கிலிட்
டாவத்தா சொரூபமாயிருக்குமமனமே சுத்
தாவத்தையில அடங்கி யிருக்கவேண்டுமெ
ன இரண்டு திருவிருத்தங்களினு லருளிச
செய்கினர்:—

அறுசீரகசழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆராத சித்தம் யாதோர் காலத்தி னடங்
கு மாகில, பேராமல வருந்திக காத்துப் பி
ன்னைச் சிந்தனைகள் சென்று, சாராமல் வல்
ல வாறு தடுத்துச சார்வான வெல்லாம்,
சேராமன் மயகக நீக்கித திதமாகச் செய்து
கொள்வான்.

(இ-ள்.) ஆராத சித்தம் யாது ஓர காலத்
தின் அடஙகும் ஆகில — அமைவு பெறாத
சித்தமானது யாதொரு காலத்தில் சுத்தா
வத்தையில் லயத்தை அடைந்திருக்கும் ஆ
யின்,

பேராமல் வருந்திக் காத்து —
தை அசையாமல் வருந்திக் காவ்

பின்னை சிந்தனைகள் சென்று சாராமல் வில்ல ஆறு தடுத்து—மன நிச்சலமானபின்பு முன்னைய வாசனையினாலே மீண்டும் விடயங்களிற் சென்று சலனத்தைப் பொருந்தாமல் ஞானோபாயத்தால் தடுந்து,

சார்வு ஆன எல்லாம் சேராமல் மயக்கம் நீக்கித் திடம் ஆகச் செய்து கொள்வான்—மயக்கத்தினால் வரப்பட்ட உயிர்ச்சார்வு பொருட்சார்வுகளெல்லாம் பொருந்தாமல் நீக்கி மனத்தை நிறுத்திக்கொள்வான் சிவாநந்த சாட்சாத்காரத்தை அடைந்திருக்கும் சீவன்முத்தன் எ—று. (௨௭)

பற்றினற சலிக்கு முள்ளம் பற்றுதே பண்ணிக கொள்க, நிற்றலின் றெனினுந் தத்த நிலையினி னிறுத்திக கொண்டால, பெற்றன மென்று பேணிப பின்னைப பேராமற் காக்கும், நற்றவ ரன்றி யிந்த வுலகினி னல்லோரியாரோ.

(இ—ள்.) பற்றினால் சலிக்கும் உள்ளம் பற்றுதே பண்ணிககொளக—மனமானது விடயங்களிலே பற்றினால சஞ்சலமாம் என்றறிந்து, விடயங்களிலே பற்றுதபடி நிச்சலமாகப் பண்ணிக்கொள்க,

நிற்றல் நின்று எனினும் தமது நிலையினி
ல் நிறுத்திக்கொண்டால்—மன நிச்சலம் ஆ
காதிருந்தாலும் ஞானோபாயத்தினாலே வி
டயங்களிலே பறவாமல் நிறுத்திக்கொண்ட
போது,

பெற்றனம் என்று பேணிய பின்னைப் பே
ராமல் காக்கும் நல்தவர் அன்றி இந்த உல
கினில் நல்லோராயார் — மன நிச்சலமாகப்
பெற்றோமென்று பத்தனமாகப் பின்னும் பூ
ர்வவாசனையினாலே விடயங்களிற் செல்லாம
ல் காவல்செய்யும் நல்ல தவத்தோடுங் கூடி
ய ஞானிகளை அல்லாமல் இந்த வுலகத்தி
ல் நல்லோர்கள் யாவர். அவர்கள் தாம் உல
காதீதர் எ-று. ஏ—ஈற்றசை. (உஅ)

மன நிச்சலத்தினாலே நிராலம்பமான ஆ
ன்மாவில் பிரகாசிக்கப்பட்ட நின்மலமாகிய சி
த்தாகாச சொரூபமே ஆன்ம சொரூபமென
று உறுதிசெய்கின்றார்;—

கலிவிருத்தம்.

பிறந்து பெற்ற வறிவாற் பெறும் பயன்
நிறைந்த நீர்முகி னீங்கிய வானென
அறிந்து தன்னை யமல வியாபகம்
செறிந்து நல்ல தியானத் திருத்தலே.

(இ-ள்.) நிறைந்த நீர் முகில நீங்கிய வுரன்—நிறைந்த நீரோடுங் கூடிய மேகங்களெல்லாம நீங்கிய ஆகாசமானது மாசில்லாமல் எப்படித் தூயதா யிருக்குமோ அது போல,

அமல வியாபகம தெரிந்து தனனை அறிந்து நலல நியானத்து இருத்தலே—ஆணவாதி சாவோபாதி சூனியமாகிய சிதாகாச ரூபமாய் நின்மல வியாபகமாயிருக்கிற தனனை அறிந்து சுத்தாவத்தையில நிலைபெறறு நிறபதே

பிறந்து பெறற அறிவால் பெறுமபயன—மககளாயப்பிறந்து நலலறிவைப பெறறதினுற பெறும பிரயோசனமாம எ-று. (உக)

அடையோகம் இராச யோக முதலான யோகசாதகஙகளைபபோல, மனததை மேலும கீழும் நடுவும பககஙகளிலும செலுததாமல நிராலமபன மாகவே பண்ணவேண்டுமென றீ அருளிச செயகின்றூர்:—

அறசீர்க்கழ்நெடிலாசிரியவிருத்தம்.

வெளியென மறுகுரு சித்த நெருசிலே மருவி நிற்கும, தெளிவுற நடுவு கீழ்மேற் செலாவணக நிறுததிக் கொண்டால், ஒளி

யுறு முள்ள மொன்றும் பாவியா துறவே
நோக்கி, எளியவப் பொருண்மேல பற்ற
றிருபபவன் யோகி யாவான்.

(இ-ள்.) வளிஎன மறுகும் சித்தம் நெஞ்
சிலே மருவிநிறகும—வாயுவைபபோல அ
சையும் சித்தம் நெஞசததிலே பொருந்தி
நிற்கும,

தெளிவு உற நடுவு கீழ்மேல் செலாவகை
நிறுததிக்கொண்டால—தெளிவைப் பொரு
நத இருதயம் மூலாதாரம, பிரமரந்திரம் இ
நதத தானஙகளிலே பாவிக்கபபட்ட பாவ
னைகளிற் செலலாமல் மனததுக்குப் பற்று
தலும் சிததத்துக்குச சிந்தித்தலும இல்லா
மல் நிசசலம பண்ணிளுல்,

ஒளி உறும உளளம் ஒன்றும பாவியாது
உறவேநோககி—சித்து ரூபமாகிய ஆன்மா
ஒருபாவனையும் இல்லாமற் சொரூப பாவ
னையே பண்ணிக்கொண்டு,

எளிய அப் பொருள்மேல்பற்று அற்று
இருப்பவன் யோகி ஆவான்—எளிமையாயு
ளள தேகாதி பிரவஞசத்திற் பற்றுதலில்லா
மற சிவோகம் பாவனை பண்ணிக்கொண் டி
ருக்கிறவனே சிவயோகி யாவான் எ-று. ()

கேவல சகலங்களை நீங்கிச சுத்தாவத்தை யில் நிலைபெற்று நிறபதே முத்தி நெறியெ ன்று அருளிச்செயகின்றார்:-

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நித்திரையும் பராக்கினேயு நீக்கிச் சித்த மொருநிலையு நீஙகாம னிறுததிக் கொண்டா ல், சித்தமொரு பொருளினையுஞ் சேரா தாகிச் சேரும்வகை சேராமற் செல்ல நின் று, மத்தமன முதலான வவத்தை யொன் று மருவாத வகைநிற்கு மதுவே யாகும, முத்திநெறி யென்றுமறை யிடைவி டாது முறையிடவு மாகமஙகண் மொழியுங் கா ணே.

(இ-ள்.) சிததம் ஒரு நிலையும் நீங்காமல் நித்திரையும பராககினேயும நீககி நிறுத்தி க்கொண்டால—சித்தத்தை ஒரு விடயங்களி லேயும செல்லாமல் கேவல சகல நீக்கித தாரசு நிலைபோலச சுத்தாவததையில் நிறுத் திக்கொண்டால்,

சித்தம் ஒரு பொருளினையும் சேராதாகி ...வ்விடததுப பூர்வ வாசனையால் மனத் ...ப் பறறுதற் ருெழிலும் சித்தததுக் கி ...டமாகிய சிந்தித்தற் ருெழிலும் பொ ...மல,

சேரும் வகை சேராமல செல்லநின்று—
பொருந்திய பட்ட விடயங்களொன்றுங்
பொருந்தாமல் நீங்கி நின்று,

மத்த மனம் முதல ஆன அவத்தை ஒன்
றும மருவாத வகை நிறகும அதுவே ஆகு
ம—விடயங்களிற செலலாநின்ற மன முத
லான தத்துவ முப்பத்தாறுடனும் தாத்து
விகங்களுடனும கூடி நிறகிற சகலாவத்தை
யும கேவலாவத்தையும இவ்வகளொன்று
ம பொருந்தாதபடி சசிதாநந்த சிவாநந்தி
ய சாட்சாதகாரமா யிருக்கும அதுவே சுத்
தாவத்தையில நிறபதாகும,

முத்தி நெறி என்று மறை இடைவிடாது
முறையிடவும ஆகமங்கள மொழியும் காண்
—பஞசபாச பந்தநிவாத்திககும இதுவே
வழியென்று வேதாகமங்கள இடைவிடாம
றசொலலும; அதனைக காண்பாயாக என்று.

"சுத்தாவத்தை" என்பது நின்மலாவத்
தை யென்றறிக. நினமலாவத்தை யாவது
சிவசொரூபமாகிய ஞானசாரியனாலே இந்
திரிய வியாத்தியுடன்கூடி நமமில அந்நிய
மான உனது சொரூபத்தை யறிந்தாயில்லை
நாமே நீயென்று போதிக்கப்பட்டவ...
ன் சிவனைககாட்டிலும அந்நியனெ...

க்கித்தல் தெளிதலைச்செய்து, ஆணவாதி ப
ஞ்சபாசங்களை நீங்கி, சச்சிதானந்த சொரூ
பமாகிய சிவத்தையே அநந்நியமாகச் சாட்
சாத்கரித்து, அதிலே அழுந்தி, அதுவே யா
ய், காசமற்றகண் சூரியப்பிரகாசத்துடனே
கலந்து பின்னை யொன்றுங்காணாததுபோல,
பசுகரணம் சிவகரணமாயிருக்கை, அது
நின்மலசாக்கிரம் நின்மலசொப்பனம் நின்
மலசுழுத்தி நின்மலதுரியம் நின்மலதுரியா
தீதம் என ஐந்தாம். அவற்றுள் நின்மலசா
க்கிரமாவது நின்மலசாக்கிராவத்தைக்குத்
தானமாகிய இருதயத்தில் சிவசத்தியுடனே
கூடுதலால் உப்பளத்திலே விழுந்தது உப்
பாமாறுபோல, சிவபூதமாய அகார உகார
மகார விந்துநாதங்களும், கிரியாசத்தி ஞானச
த்தி இச்சாசத்தி ஆதிசத்தி பராசத்திகளுட
னும், மனம் புத்தி அகங்காரம் சித்தம் உள
ளமெனனும் ஐந்துடனுங்கூடி, பாகிந்திரிய
ங்களாற் காணப்பட்ட சத்தாதிவிடயங்களை
ச் சிவாகாரமாகவும், விடயசுகங்களைச் சிவா
நந்தமாகவும் அநுபவிப்பது; நின்மல சொ
ப்பனமாவது சாக்கிராவத்தைக்குக் காரண
மாகிய அகாரம் உகாரத்திலும், புறத்தில் வி
டயங்களைப் பற்றுமனம் அகங்காரத்திலும்,
கிரியாசத்தி ஞானசத்தியிலும் ஒடுங்க, அக

ராதி நான்குடனும், அதைப் பிரேரிப்பதா கிய உகாரர் நான்குடனும், அதற்குப் பிராணனாகிய ஞானசத்திமுதல நான்குடனுங்கூடி, சொப்பனாவத்தைத் தானமாகிய கண்டத்தானத்திலே அந்தக்கரண விருத்தியுடன் சிவோகம் பாவனைபண்ணி நிற்பது. நின்மல சுழுத்தியாவது சொப்பனாவத்தைக்குக் காரணமாகிய உகாரம மகாரத்திலும, நானென்று திரிகிற அகங்காரம் புத்தியிலும, ஞானசத்தி இச்சாசத்தியிலும ஒடுங்க, புத்திமுதலான மூன்றும, அதைப் பிரேரிக்கும் மகராதி மூன்றும, அதற்குப் பிராணனாகிய இச்சாசத்தி முதல் மூன்றுடனுங்கூடி, சுழுத்தித் தானமாகியதாலு மூலத்திலே தேகேந்திரிய வியாபார மற்று வாசாம கோசரமாய் ஞாதுரு ஞான ஞேய மென்னு மூன்றுஞ்சுகத்தை அநுபவித்து நிற்பது. நின்மல துரியமாவது சுழுத்தியவத்தைக்குக் காரணமாகிய மகாரம் விந்துவிலும், புத்தியும் புத்தி சித்தத்திலும், இதற்குப் பிராணனாகிய இச்சாசத்தி ஆதிசத்தியிலும் ஒடுங்க, சித்தமுதலாகிய இரண்டும் அவைகளைப் பிரேரிப்பதாகிய விந்து நாதங்களுடனும், அதற்குப் பிராணனாகிய ஆதிசத்தி பராசத்தியுடனுங்கூடி, துரியாவத்தைக்குத் தானமாகிய

பூருவமத்தியத்திலே தேகேந்திரிய அந்தக
காரணங்களின் வியாபாரம் ஒன்றுமில்லாம
ல், கேவலம் ஞானமாத்திரமா யிருப்பதும்;
நின்மல துரியாதீதமாவது துரியாதீதாவத்
தைக்குக் காரணமாகிய அநாகத நாதமென
னும் பராசத்தியும், சிவாநந்தாநுபவியாகிய
ஆன்மசொரூப ஞானமாகிய உள்ளமும், நி
ன்மலா தீதாவத்தைக்குத் தானமாகிய பிர
மரந்திரத்திலே அகண்டாகார சச்சிதாநந்
தாத்துவித பரிபூரண சிவாநந்தானுபோகத்
தை இரண்டறப் பெற்றிருப்பது; இந்தத்
துரியாதீதாவத்தை ஆன்மனுக்கு மேற்பட
டிருக்கிற பரமமோட்சம். இதைப்பெறவே
நிவிர்த்திமுதலான பஞ்சகலைகளும் அன்ன
மயமுதலான பஞ்சகோசங்களும், நகாராதி
நால் பஞ்சாக்கரமும், அகாராதி சூக்கும்ப
ஞ்சாக்கரமும், சத்தியோ சாதாதி பஞ்சம
ந்திரங்களும், பிரமாமுதலான பஞ்சகாத்த
ர்களும், சுத்தவித்தைமுதலான பஞ்சதத்து
வங்களும், மன முதலாக உள்ளதுடனே
அந்தக்கரணங்கள ஐந்தும், வைகரி முதலா
ன வாக்குகள ஐந்தும், கிரியாசத்தி முதலா
ன பஞ்ச சத்திகளும், ஆணவாதி பஞ்சபா
சங்களும், சாவோபாதிகளும நீங்கும். இங
ஙனம், நின்மலதுரியாதீதாவத்தையை ஒரு

பசு கறக்கிற நேரமாத்திரமாயினும், வில்வி றகழ்ன்ற அப்பு பூமியிலே விருமளவாயினும், கண்ணிமைக்குமளவாயினும் பெற்றவன் மீண்டும் பிறவானென்று அறிக. (௩௧)

மனோவியாபாரமும் இல்லை, மனத்தால் அறியப்படும் பொருளும் இல்லை, அறிவானும் இல்லை, தன்னிடத்திலேதானே தானிருந்து விடயங்களெல்லாம் விட்டு நீங்கினவனாய், சிவசாட்சாத்காரமாயிருப்பவனுக்குச் சுழுத்தியவத்தையில் தத்துவங்கள் எல்லாம் ஒழிந்திருக்கும் நிலைபோல் நிற்கும் என்று சிவாகமங்களிலே அருளிச்செய்திருக்கையால், குறித்த சொரூபமாய்ச் சொல்லினமாகிய தன்னிடத்திலே அடங்கியதாகிய அந்தச் சுத்தாவத்தையை மோட்சசொரூபசாதனமென்று அநுசந்தானம் பண்ணிக்கொண்டிருக்கிறவன் மீண்டும் பிறவாமல் சிவசாயுச்சியத்தை அடைவனென்று அருளிச்செய்கின்றார்:—

பொருண்முழுதுமடையாமன் மனத்தை வாங்கி நெஞ்சகத்தே பொருந்துவித்த பொழுது தோன்றும், இருளறுநன் ஞான[illegible]ளி பதுவிளங்க வெப்பொழுதும் வாத[illegible]யே யியற்றிக் கொள்க, பரமதுவாயில்த[illegible]

யங்க மின்றிப் பற்றின்றி யவத்தை யின்றி நி
ன்ற வொன்றை, உரனுடைய் தியானிகளா
யுறைகின் றோ பிறப்பிலா வந்நிலத்தை யு
றுகின் றோ.

(இ-ள்.) மனத்தைப் பொருள் முழுதும் அ
டையாமல் வாங்கி யெடுத்ததே பொருந்
து வித்த பொழுது—மனத்தை இருவகை
மாயையின்கண்ணுள்ள சர்வ விடயங்களிலு
ம் பற்றாமல் தம்மிடத்திலே அடங்கும்படி
நிச்சலமாகப் பண்ணின பொழுது,

தோன்றும் இருள் அறும் நல்ஞான ஒளி
யது விளங்க எப்பொழுதும் வாதனையே இ
யற்றிக் கொள்க—மன நிச்சலத்துக்கு மேற்
பிரகாசிக்கப்பட்ட நின்மலமாகிய சொரூப
ஞானம் இடைவிடாமல் விளங்கும்படி ஞா
னோபாயத்தை எப்பொழுதும் பண்ணக்கட
வர்,

பரமது ஆய இலது ஆகி அங்கம் இன்றி
பற்று இன்றி அவத்தை இன்றி நின்ற ஒன்
றை உரன் உடைய தியானிகள் ஆய் உறை
கின்றோ பிறப்பு இலா அந்நிலத்தை உறு
கின்றோர்—அங்ஙனம், உன்மனாந்தமாய நி
ருபாதியாய நிராகாரமாய் நிராலம்பமாய
ஓர் அவத்தைகளும் இல்லாததாய நிற்கின்ற

சச்சிதாநந்த பரிபூரண சிவாநந்திய சாட்சாத்காரமாய் விளங்கும் சுத்தாவத்தையைத் தினவரதமும அநுசந்தானம் பண்ணிக்கொண்டிருக்கிற சீவன்முத்தர்களே பிறப்பற்ற சிவ சாயுச்சியத்தை அடைகின்றவர் ஆவர். எ-று. ஏ - அசை. (௬௨)

சுகதுக்க ஏதுவாயிருக்கிற விருப்பு வெறுப்புகளும, தேவதாவுபாசனையும, புண்ணிய பாவங்களும, கன்மபலன்களும, பதப்பிராப்திகளும, இவைகள் உண்டாவதற்குக் காரணமாகிய உயிர்ச்சார்வு பொருட்சார்வுகளும, நீங்கிய தபோதனர்களிடத்துச் சிவம் இரண்டற விளங்குமென்று அருளிச்செய்கின்றார்:—

துக்கசுக மாசைவெறுப பென்று கூடுந்
துவந்துவங்க ளிரண்டவைபோற் சொல்லப் பட்ட, மிக்கதெய்வ மடவார்க டன்மா தன்ம மெய்ப்பலனகள் பெறுவயே றுளவா மென்று, தொக்கவுள மதுவாகும் பிறப்பை யாக்குந் தொடர்பெனவே துணிந் தந்தத் தொடர்பை யாக்கும், தக்கபொருட் சார்வுயிர்ச்சார் வடைய நீக்குந் தவத்தோர்பாற் சிவம்வந்து சாருங் காணே.

(இ-ள்.) சுகம் துக்கம் ஆகிய வெறுப்பு என்று கூடும் இவ்விருவகை இரண்டு—சுகதுக்க ரூபமாகிய பிறவிக்கு ஏதுவென்று சொல்லப்பட்ட விருப்பு வெறுப்புகள் ஆகிய தொடர்ச்சிகள் இரண்டும்,

அவைபோல் சொல்லப்பட்ட மிக்க தெய்வம் மடவார்கள் தன்மா தன்மம் மெய்ப்பலன்கள் பெறுவ பேறு உளது ஆம் என்று—முன் சொல்லப்பட்டவைபோல், பிறவிக்கேதுவாகிய பிரமாமுதலான தேவதோபாசனைகளும், அவர்களுடைய சத்திகளின் சம்பத்தும், இவற்றால் வரும் புண்ணிய பாவங்களும், சித்திகளும் பந்தபேறுகளும் உண்டாம் என்று,

தொக்க உளமது ஆகும் பிறப்பை ஆக்கும் தொடர்பு எனவே துணிந்து—இங்ஙனம் சொல்லப்பட்ட இவைகளிற் பொருந்திய உள்ளமானது அதற்கேற்ற பிறப்பை உண்டாக்குந் தொடர்ச்சியென் றறிந்து,

அந்தத் தொடர்பை ஆக்கும் தக்க பொருட்சார்வு உயிர்ச் சார்வு அடைய நீக்கும் தவத்தார்பால் சிவம் வந்து சாரும் காண்—அத் தொடர்ச்சியை உண்டாக்கத் தக்க பெண் மணி முதலிய பொருட்சார்வுகளையு

[illegible] வியாபாடம்.

மாதா பிதா மனைவி மக்கள் முதலிய உயி[illegible] சரீரங்களின் பற்று முழுதும் நீங்கிய தபோத[illegible] சிவம் இரண்டற விளங்கு[illegible] வாயாக என்று. [illegible] (கூ)

சிவத்தை இரண்டறப் பெற்றிருக்கும் சி[illegible] வைராக்கியத்தால் தேகம் விட்டு[illegible] அருளிச்செய்கின்[illegible].—

உடம்புடனே உபாயத்தால் விளங்கித் தோன்று முன்னே [illegible] சிவமவந்து [illegible], உடம்பட்டே சிவன் முத்த[illegible] விட்டால் [illegible] முத்தி தனைச் சேர, விடப்படு[illegible] ஞானியுடல் வேண்டா [illegible] வெய்யவிட[illegible] வேண்டா, [illegible] கொள்வினை தன்னையும் [illegible] கதன்பி[illegible] கழியும் [illegible].

(இ-ள்.) உடம்புடனே — இந்தச் சரீரத்திருக்கையிலே தானே

உபாயத்தால் விளங்கித் தோன்று[illegible] உண் [illegible] சிவம் வந்து உற்ற [illegible] நிச்சல உபாயத்தால் பிரகா[illegible]

தோன்றுகின்ற உள்ளொளியாகிய சிவானந்த சாட்சாத்காரம் விளங்கின போதே,

திடம்படவே சீவன் முத்தன் ஆகும்— திடமாகச் சீவன் முத்தனாவன்,

விட்டால் அவன் பரமுத்தி தன்னைச் செல்லும்—பிராரத்த சரீரம் நீங்கினால் அவன் பரமுத்தியைச் சென்றடைவன்.

சேர விடம்படும் மெய்ஞ்ஞானி உடல வேண்டா என்றே இப்பொழுதே வலியவி — எண்ணவேண்டா — சர்வ பிரவஞ்சமும் விடம்போலத் தோன்றப்பட்ட சீவன் முத்தனானவன், சரீரம் வேண்டாவென்று இப்பொழுதே வலியவிட நினைக்கவேண்டுவதில்லை,

சடன் கொள்வினை தன் அளவு நின்றே அந்தக்காயமும் அதன் பின்னே கழியுமகாண் —எடுத்த உடலுக்கு கடுத்த பிராரத்தம் உள்ளமட்டும் இருந்து அந்தச் சரீரமும் பிராரத்தந் தொலைந்தபின்னர் நீங்காநிற்கும், நிபாராப்பாயாக எ—று. எ—கருத்தைச. (கூ௪)

இங்ஙனஞ் சொல்லியபடி சீவன் முத்தித் தன்மையும், தேகாந் தத்திலே பரமுத்தித் தன்மையும் ... முத்திக்கேதுவாகிய உபாயமுங் கூறி, சி... ...யிலே அவ்வியத்

தம்மாயிருப்பதும சிவத்துவத்தோடு கூடிய சீவன் முத்தநிலைமையை சைதன்னிய மானது தேகநீங்கிய பரமுத்தியாமளவும இருக்குந் தன்மையை அருளிச செய்கின்றார்:—

ஆகத்தே யாங்கார வடிவ தாகி யருவினை செய்த தங்கார மாரு மாய, மோகத்தைத துறக்கின்மொழி யிறப டாத முத்திதல மினி தளிக்கு மொழிந்த தன்றிச, சோகத்தைத தருமுடலை யெல்லாம விட்டிச சோராத வரிவாகின சுத்த ரூபம், ஆகததான் பாவித்தா ற சத்தி யெல்லா மறவிடுகை பரமானந்த மரிவாம தாமே.

(இ-ள்.) ஆகத்தே அங்கார வடிவது ஆகி அருவினை செய்து அசங்காரம ஆகும மாய மோகத்தைத துறக்கின்—இருதய கமலத்திலே நானென்கிற அகங்காரத்துடனே கூடி, அதனால அழுக்கடைந்து அந்தக கரணத்தலைவுடன கூடிக் கன்மங்களைச்செய்து, நான் சுசி நான் துக்கி நான் கர்த்தா நான் போகியென்று இங்ஙனம அநேக விதமாக அகங்கரிக்கும் அகங்கார [illegible] மாய்ப பொய்யாயிருக்கிற மயக்கமாகி[illegible]வை நீங்கினால,

மொழியில படாத மு[illegible] இனிது அளிக்கும்—வாக்கிறந்த [illegible] வீட்டை இனிதாகக் கொடுக்[illegible]

மொழிந்தது அன்றி—இங்ஙனஞ் சொல்லப்பட்ட உடற் பற்றல்லாமல்,

சோகத்தைத் தரும உடலை எல்லாமவிட்டு—துக்க ஏதுவா இருக்கிற சரீரத்தையும ஆணவாதி பஞ்ச பாசங்களையு நீங்கி,

பரமார்த்தம் அறிவார—பரமார்த்தம உணர்ந்த சீவன்முத்தர்கள்,

சோராத அறிவாகி சுத்தரூபம ஆர்த்தான் பாவித்துச சத்தி எல்லாம அறவிடுக—நின்மலமாய நித்தியமாயிருக்கிற சிவானந்நியூ சாட்சாத்காரத்தைப பொருந்திச சிவோகம் பாவனைபண்ணிப் பிராரத்த கன்மத்தால் உண்டாகும போகத்திற பற்றறிருக்கக்கடவர் எ-று. தாம-ஏ-அசை. (௧௫)

வர்ணாசிரம தருமங்களை எல்லாம விட்டுச் சிசாச சொரூபத்தை அறிந்தவர அப்பாவனையே பண்ணக்கடவர் என்று அருளிச்செய்கின்றார்:—

கலிவிருத்தம்.

[illegible]மாசசிரமமென வைத்தவும
செய்ய சாதி குலமெனச சொத்தவும
ஐய மின்றியறவிட டறிந்தவா
செய்ய ஞானத் திரளைச சிந்திக்கவே.

(இ-ள்.) வையம் செய்ய சாதிகுலம் என
ச் சேர்த்தவும் ஆச்சிரமம் என வைத்திவ்வி
ஐயம் இன்றி அறவிட்டு அறிந்தவர்—உலக
இயற்கைகளையும், பிராமணன் க்ஷத்திரியன்
வைசியன் சூத்திரன் அநுலோமன் பிரதி
லோமன் அந்நியசாதி என்னும் சாதிபேத
ங்களையும், பிரமசரியம் கிருகத்தம் வானப
பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்க
ளையும், சந்தேகம் இல்லாமற் பற்றறவிட்டு
நீங்கிச் சொச்சொரூபத்தை அறிந்தவர்,

செய்ய ஞானத் திரளைச் சிந்திக்க — நின்
மலஞான சொரூபமாயிருக்கிற சொச்சொ
ரூபபாவனையே பண்ணக்கடவர் எ-று. ஏ-
ற்றசை. (௩௬)

இந்தச்சீவன் மூத்தா ஒன்றினாலும் வசீ
கரிக்கப்படாமலிருக்கிற பரமசுதந்தரத்தை
இரண்டு திருவிருத்தத்தினால் அருளிச்செ
ய்கின்றார்:—

௸ வேறு.

நடைபடு முலகிய றன்னைக் காண்குறில்
உடையவ ரொனையிலை யானுடை யாரிலை
அடையவு மெனக்கிலை யானு மன்னதே
நடையிது நிலையெனிற் றமிய னைனரோர்.

(இ-ள்.) கடைபடும் உலகியலு தன்னைக் கண்குறில் — சிறுமையாகிய உலகஇயற்கையைக் காணுமிடத்து,

என்னை உடையவர் இலை—சிவபெருமானுக்கு நான் பூசகனுமாய வேதகனுமாய்க் காணேன், எனக்குக் கர்த்தாவாகவும் வேறொருவர் இல்லை,

யான் உடையார் இலை — எனக்குச் சிவபெருமான் பூசிக்கப் பட்டவருமாயத் தியானிக்கப்பட்டவருமாய நான்காணேன, என்னை அடிமையாக உடையவாகளும இலலை,

எனக்கு அடையவும இலை — எனக்குச் சென்றடையும் பொருளும இலலை,

யானும அன்னதே—என்னைவந் தடையும்பொருளும் இலலை,

நடை இது நிலை எனில் நான் தமியன்—இங்ஙனம கூறியவிதங்கள எலலாம் பரமாரத்தம அலலாமையால, பரமார்த்தமாக விசாரிக்கில சச்சிதாநந்த சிவாநந்திய சாடசாத்காரமா யிருக்கும் நான் ஒருவனுமே உளன் எ-று. அரோ-அசை. (௩௭)

கொச்சகக்கலிப்பா.

நித்தனும் பரமேசன் யானென்று நிச்சயிக்கின், முத்தனல னெனினுமவன் முத்தனு

முயிருடம்பின், பெத்தமற ஞானத்தாற் கா
டசிபெற்ற சாந்தியுடைச, சித்தனுயப் பொ
ருடபறறு நீந்துவீ டடையுமால்.

(இ-ள்.) நித்தன் ஆம பரமேசன் யான்
என்று நிசசயிககின் அவன் முத்தன் அலன
எனினும முததன ஆம — நித்தனுயச சா
வகாததாவா யிருககிற பரமசிவன் நானே
என்று யாவன ஒருவன் நிசசயம பண்ணி
னுன் அவன சமாதி கூடாதிருநதாலும, சிவ
ன் முததனுவன்,

உயிர் உடம்பில் பெததம அற ஞானதகா
ல் காடசி பெறின் சாநதி உடைச சித்தன்
ஆய் பொருள் பறறுத் தீர்ந்து வீடு அடை
யும—சரீரமுதலான சாவபந்தஙகளுமநீஙக,
ஞானக கண்ணினுல சசசிதாநந்த சிவா நந
நிய சாடசாத்காரமா யிருக்கும சிவானுபூதி
யைக கண்டபொழுது, சாந்தமாகிய மன நி
சசலததை உடையவனுய, சாவ பதாாத்த
ஙகளிலும பறறறறு, சிவசாயுசசியத்தை அ
டைவன எ-று. ஆல-அசை. (௩௮)

சித்துககு அபின்னமாகச சிற்சொரூப சி
வாநநியமாயிருக்கிற சிவோகமபாவனு ரூப
யோகததை நிசசயித்தவனே சீவன் முதத
னென்று அருளிச்செய்கின்றார்:—

எல்லையிலா நூல்களெல்லாம பிறப்பிலியே யீசனென்ச, சொல்லுகின்ற வத்தானான் சொல்லப்படுமக் குணந்தொடரும், அல்லிலா வான்மாவா யறிவளவை யளக்கின்ற, தெல்லையிலா தெனினுநானி நிலையமிலே யறிக.

(இ—ள்.) எல்லை இலா நூல்கள் எலலாம பிறப்பு இலியே ஈசன் என்ச சொல்லுகின்ற வத்து நான — அளவுபடாத வேதாகமமுத லான நூல்கள் எல்லாம சரீரம் இல்லாதவன் என்றும பிறப்பு இல்லாதவன் என்றும சர்வ கர்த்தா என்றுஞ் சொல்லப்பட்ட பரமசிவனும நானே,

சொல்லப்படும் அக்குணம தொடரும அல்லல் இலா ஆன்மா ஆய் அறிவு அளவை அளக்கின்றது எல்லை இலாது எனினும நான்— சொல்லப்பட்ட அக்குணத் தொடர்ச்சியினாலே வரும் துக்கம இல்லாத ஆத்மாவாய். பரமாத்ம சொரூபமாய, சர்வஞ்ஞத்துவ முடையனாய, சர்வபரிபூரணமா யிருப்பதாயினும் அப் பர மானமாவும நானே,

இதில ஐயம் இலை நீ அறி — இங்ஙனஞ் சொல்லியதிற சந்தேகம இல்லை, நீ அறிவாயாக எ—று. (௩௬)

திருவிதறப சொரூப மாய்ச சிவாநநதிய யோக நிட்டா பரனாயிருக்கிற சிவன் முத்தனானவன் தன்மா தன்மாதி மலினவாசனை யினின்றும் திருமபப படடிருக்கிற சித்த புத்தியாதி கரணங்களினாலே பிராரதத வாசனை மாத்திரம பிரவிருத்திக்கப படடு, சித்துரூப பிரகாசத்தினாலே பரிபூரண பரம சுதந்தர சொரூபமாயிருக்கும பரமசிவைக்கிய அநுசந்தான சொரூபியா யிருப்பனென்று ஒன்பது திருவிருத்தத்தினாலே அருளிச் செய்கினார்:—

"அறிவாகிச் சுத்தனா யறிவானாய வேறாகிச, குறியாது கொளல்வீடு கூடாது கூறுங் கால், அறிவார்த்தா மிலராகிச சோகாதி யடையானாயப, பிரியாத பரப்பிரம மெனநிறபன் பெண்ணணங்கே.

(இ-ள்.) பெண் அணங்கே—பெண்களிற் சிறந்த கற்பாகிய அழகையுடையாளே,

கூறுங்கால அறிவு ஆகிச சுத்தன் ஆய் அறிவான் ஆய வேறு ஆகி குறியாது வீடுகொளலகூடாது—சொலலுமிடத்துச் சித்துரூபனாய், நின்மலனாய், சாவத்தையும் அறிபவனாய், பஞ்ச பாசங்களுக்கும் வேறாய, சிவா

ந்நிய சாடசாதகாரத்தை அறியாதபோது முத்தியடைதல கூடாது, (ஆதலால்)

அறிவார் இலா ஆகிச சோகாதி அடைப்பான ஆய்ப பிறியாத பரபபிரமம எனநிற்பன—சீவன்முததன, சாவாநீதனாய் ஸ்வஸம்வேத்தியம் ஆகையினாலே அறிவானும அறிபபடும் பொருளும இல்லையாய், ஞாதுரு ஞானஞேயம் என்கிற சங்கற்ப ஞானஙகளும இல்லையாய், சமரசமாய்ப் பிறிவற்றிருக்கிற ப்ரப்பிரம சொரூபந் தானாயிருப்பன் ௭-று. (௪0)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருக்தம்.

நீடிய தலைகா லெஙகு நிறைமயிர்த தோலை லே, மூடிய வுடலுங காணுங கனவெனு முளத்தனாகி, கூடிய விதனினானக குறிப்புடைத தியோ யென்றும, கேடிலா தென்றாகிற் கேடிலா ஞானமாகும.

(இ-ள்.) நீடிய தலைகால எஙகும நிறைமயிர்த் தோலினாலே மூடிய உடலம் காணும் கனவு எனும உளத்தன் ஆகி - நிலைபெற்ற தலைமுதல் பாதமளவாக எவ்விடமும் சிலைகொண்டு மூடினாற் போல நிறைந்த மயிர்த் தோலால் மூடப்பட்ட சரீரம் கனவுபோலப் பொய்யென்று அறிந்தவனாய்,

கூடிய இதனில ஞானகருவி உடைத்து, உயிரெனறும கேடு இலா நானெனறும பேய கின கேடு இலாருதானட ஆகும—இவவா று பொருந்தபபட்ட சரீரத்தில நிறகுமதேன னுடைய சொரூபம நிததியமெனறும சித்து ரூபமெனறும ஞானக கணவிறுலே பார ககினற பரமாயிருககிற ஞானசொரூபமேயா வன எ-று. (சுக)

கொச்சகக்கலிபபா.

நிறபனவு நடபபனவு மாயியஙகு நீடுயிர கட, கொபபுடைய தாயதந்தை யீசனுமாயு ளேனுனை, கைபபடவு முத்தியினிற் காம ராயத தரியததே, நிபவாக ளருசசனையா லெனனையே நினைவரால.

(இ ள.) நிறபனவும நடபபனவும ஆய் இயஙகும நீடு உயிாகடகு — சராசரஙகளாய விலபெறறிருககும உயிரகளுககு,

ஒபபு உடைய தாய தநதை ஈசனும் ஆய உளளேன் நான—பொருநதிய மாதாவும் பி தாவும் காததாவுமாகி நான இருககினறேன் ஆதலால,

கைபபடவு முததியினில காமா ஆ... ரியத்தே நிறபவாகள அருசசனையால எனனையே நினைவா—சிவ ஐககியததைப் பொ

ருந்தவேண்டு மென்று மோட்ச விசனைசயு டையவர்களாய உபாதிநீங்கி நுரியாவத்தை நடைந்து பசுஞானமாரகள பூசை பண்ணுமிடத்தும எனனையே தியா னித்துப புரிபபாகள் எ-று. ஆல-அசை.

"ஈண்டுத் துரியம்" என்றது சாயுச்சியத்தை.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

நான்முகன் முதலாந்தேவர் நராநாக மியக்கர் சித்தர், ஏனையோர் சசுச மெல்லாம விதிகளு மெனனைப்போறறும, ஆனபின னவனேபூசைக் கருகனென றுநதோர் தேனமர் குழலாய்நெஞ்சாற சிறந்தன வெனக்குச் செய்வார்.

(இ-ள்.) தேன அமர் குழலாய—வண்டுகள் விரும்பி மொய்க்கின்ற அளகத்தை உடையாளே

நான் முகன் முதலாம் தேவர்- பிரமன முதலான தேவர்களும,

நரா நாகர் இயக்கர் சித்தர் ஏனையோர் எ சசுசம் எல்லாம் விதிகளும—மானிடரும் நா கலோகத்தார்களும் இயக்கர்களும் சித்தர்க ளும் இவர்களல்லாத மற்றவர்களும் செய் யும் சமஸ்தகிருதுக்களும,

எசு தேவிகாலோத்தர வுரைபாடம்.

என்னை ! போற்றும—என்னையே கர்த்தா வாகபபேணும, (ஆதலால)

ஆனபின் அவனே பூசைககு அருகன் எ ன்று அறிநதோர் எல்லாம் நெஞசால சிற நதன எனககே செய்வார—அவை முறறு பபெற்ற பின்னா எல்லாபபூசையுங் கொள் வது நாம் ஆகையால அவரோ பூசைகொள் வதற் கருகரென்று எல்லாவகையாலும தங் கள தங்கள் மனத்துக்கிட்டமான பதார்த்த ஙகளை நமக்கே நிவேதனம் பண்ணுவார்கள் எ-று. (௮௩)

கொச்சககலிப்பா.

ஆற்றரிய தவம்பலபூண் டடவியழல் கா லசயிலம, போற்றரிய புனலவெயிலூண் டு றந்துநின்று பொறுப்பதுவும், ஏற்றவருக் குயிருடமபு முதலாக வீவதுவும், நாறறி சையோர் பூசையிவை நான்கொள்வே னெ ன்றேகாண்.

(இ-ள்.) நாறறிசையோர ஆற்ற அரிய தவம பலபூண்டு—நாலுதிககிலும உள்ளார செயதற்கரிய தவஙகள பலவற்றையும் பொ ருநதி,

அடவி அழல் வெயில் சயிலம் நின்று போற்ற அரியகால் புனல் ஊண் துறந்து

பெற்றுப்பதுவும — கானகத்தில் பஞ்சாக்கி
னிமத்தியில் வெயிலில் நின்றும் மலைகளிலே
நின்றும் பசியை நீக்குதற்குரித்தல்லாத வா
யுப்பட்சணஞ்செய்து சலபானம் பண்ணியும்
புசிப்புகளைத் துறந்தும் நிராகாரமாய்ச் சகி
த்திருப்பதுவும,

எற்றவருக்கு உயிர் உடம்பு முதலாகாவ
துவும் பூசை இவை நான் கொள்வேன் என்
றே காண் — தம்மிடத்துவந்து கேட்டவர்க
ளுக்குச் சரீரம் பிராணன் முதலான பொரு
ளகளைக் கொடுப்பதுவும் ஆகிய இங்ஙனம்
சொல்லப்பட்ட இவைகளை நாமேகைக்கொ
ண்டு பலன் கொடுப்போமென்று கருதியே,
நீ அறிவாயாக எ-று. (௪௪)

ஆனநிலை யாவுடைய பூதங்க ளனைத்துநா
ன, ஏனையவை யானவையுள வெவையுநான்
றானுண்மை, ஆனவியா வையுமல்லே னெ
னையறியி லறிவோர்க்கு, ஞான மொன்று
மென்னுருவ நானேயெவ் வுயிர்க்குறவும்.

(இ-ள்.) ஆனநிலை ஆ உடைய பூதங்கள
அனைத்தும் நான் — * புவனாதிகளுக்காதார

---

* இருவகை மாயையினிடமாகத் தோன்றிய பஞ்ச
பூத முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவ
ங்களு நாமே எனப் பொருள் கூறினும் அமையும்.

எல்லாரும் தொழும் ஈசன்—சர்வான்மா க்களும் வழிபட்டு வணங்கும் கடவுளாய நாம,

எனக்கு அவத்தை எவையும் இலை—எமக்கொரு அவந்தையும இல்லை,

நில்லாத உலகத்தை மிக நீயகி நிறபேம் நான் — அநித்தியமாயிருக்கிற பிரவஞ்சத் தை மிகவும் நீங்கிப் பிரவஞ்சாதீதமாய் நிற போமநாம எ-று. (சஅ)

சலிகிலேதநுரை.

ஒன்றுடனுந் தோய்விலலா ஞெத்தாா மிக்காரிலலா னுலக மில்லான், நின்றநினை வுக்கெட்டா நிதநனகா ணபபடா னெஞசி னிற்பான், பொன்றுபிறப பிணிமுதலா மறி வினனிட் களன்பழைமயொன் பொருளகமி ல்லோன், என்று நினைந தடிககடியும பிரம மென நோககுதலே யியலபதாகும.

(இ-ள.) ஒன்றுடனும தோயவு இலலான்—சர்வோபாதிக்ளுடனுங கூடாதவா,

ஒத்தார மிக்கார இல்லான்—ஒப்பு முயர்வு இலலாதவர்,

உலகம் இல்லான்—பிரவஞ்சாதீதர்,

நின்ற நினைவுக்கு எட்டான் — வாக்கு மனாதீதா,

நிருத்தன — அழிவற்றவர்,

கர்ணபட்டான — ஞானக்கண்ணிலே யன்றி இந்திரியங்களிலேலே கர்ணப்பட்டார்.

நெஞ்சில நிறபான — முத்தான்மாக்களின் நெஞ்சத்தே நிற்பார்,

பொன்று பிறப்பு இலி — பிறப்பு இறப்பு இல்லார்,

முதல ஆம அறிவினான — இங்ஙனம் சொலலப்பட்ட முறைமைகளையுடைய ஞானசொருபர்,

நிட்களன் — கலாரகிதர்,

பழையோன் — அநாதியே உள்ளவர்,

பொருள்கள் இலலோன் — நிராலம்பசொருபர்,

என்று நினைந்து அடிகளும் பிரமம் என நோக்கலே இயலபாநதுகும் — இவ்வாறே நினைந்து இடைவிடாமல் அப்படிப் பிரமசொருபமே நாமென்று காணபதே இயல்பானது—று. (௮௭)

கொச்சகக்கலிப்பா.

இப்படியே பாவித்துச் சமியாதான் யாவனவன், அப்பிரமமாதலால் அமுதமாம் முத்தியாய, செப்பரிய வீடுபெறத் தெரிந்து

ளர்த்த ஞானமீ, திப்பொழுதா சாரந்த
சரியமையுகின்றேன் நீதுகேட்பாய்.

(இ-ள்.) அர்த்தம் ஆம் அறுகியாய்—அறு
கினையுடைய அக்ஷர சொரூபியே,

இப்படியே பாவித்துச் சரியாதான் யா
வன் அவன் அப்பிரமம் ஆதலால்—முன்
சொன்னபடியே அத்துவித பாவனை பண்
ணிக்கொண்டு பண்ணுப் பாவற்றிதமா யிருப்ப
பவன் யாவன், அவன் பிரமசொரூபம் ஆ
வாகயிருப்பேல்;

செப்ப அரியவிடு சொல்லத் தெரிந்து உரை
த்த ஞானம் ஏது — சொல்லுதற் கரிதாகிய
பரமசிவ சாயுச்சியத்தை அடைவதற்கு வி
சாரித்துச் சொல்லப்பட்ட ஞானம் இது
வாம்,

இப்பொழுது ஆசாரம் இயம்புகின்றேன்
இது கேட்பாய்—உத்தரகிரமத்தில் இங்
ஙனஞ் சொல்லிய ஞானத்துக்கு உசிதமாயி
ருக்கிற ஆசாரத்தைச் சொல்லுகிறேம் கே
ட்பாயாக எ-று. தான்-அசை. (௪௮)

சச்சிதாநந்த சிவமேயாயிருக்குஞ் சீவன்
முத்தனுக்கு விடப்படுவதா யிருக்கிற கிரி
யைகளை அருளிச்செய்கின்றார்:—

கலிவிருத்தம்.

இந்த முத்தி யடைவதற் கேந்திழாய்
அந்த ஞான மலாதொரு ஞானமும்
சிந்தை செய்சிவ பூசையு மோமமும்
அந்த மில்சா தனமங்கி வேண்டாவால்.

(இ-ள்.) ஏந்து இழாய் இந்த முத்தி அடைவதற்கு—சிறந்த ஆபரணத்தை உடையாளே, இங்ஙனஞ் சொல்லப்பட்ட முத்தியை அடைவதற்கு,

அந்த ஞானம் அலாது ஒரு ஞானமும்—முன்சொன்ன ஞானமே அல்லாமல் வேறே ஒரு பாசபசு ஞானங்களும்,

சிந்தைசெய் சிவ பூசையும் ஓமமும்—சிந்திப்பதாகிய சிவார்ச்சனையும் நித்தியாக்கினி காரியமும்,

அந்தம் இல் சாதனம் அங்கி வேண்டா—மோட்சத்தைச் சந்திப்பதாகிய பல சாதனங்களும், சோதிட்டோமம் ஆதியாகிய யாகங்களும், வேண்டுவதில்லை எ-று. ஆல்-அசை.

இப்படிப்பட்ட சீவன்முத்தனுக்கு நித்திய நியமங்கள் முதலான அநுட்டானங்களும் வேண்டுவதில்லையென்று அருளிச்செய்கின்றார்:—

அச் தேவிகாலோத்தர வரைபாட்டம்.

நியமஞ் கேத்திரம் பீடம் தீர யாத்திரை, செ யமுறை சொன்ன விசசேவை விருந்தோம் பல, பயனின்று ஆம்பிதிர் பூசையுஞ் சீலமு ம, இவையின்று முத்தி யெய்தும் இவர்கட் கே.

(இ-ள்.) நியமம்—சௌசவிதி முதலான நித்திய நியமங்களும்,

கேத்திரம்—புண்ணிய க்ஷேத்திர வாச மும்,

பீடம்—காஞ்சி முதலான ஆதிபீடங் களைகளும்,

தீர யாத்திரை—கங்கை முதலான தீர்த்த யாத்திரைகளும்,

செயமுறை சொன்ன இசசேவை—செய வதாகச சைவாகமங்கள் முன்பு சொல்லிய சேவைகளும்,

விருந்து ஓம்பல—விருந்தினரை உபசரி த்தலும்,

பயன் இன்று ஆம் பிதிர் பூசையும்—தம க்குப் பயனற்ற பிதிர்களைப் பூசித்தலும்,

சீலமும்—நல்லொழுக்கமும்,

முத்தி எய்தும் இவர்கட்கு இவை இன் று ஆம்—சீவன் முத்தர்களுக்கு இங்ஙனஞ்

சொல்லப்பட்ட இவைகளெல்லாமும் வே
ண்டுவதில்லையாம் எ-று. ஏ-றறைச. (ருங)

அட்டமி முதலான விரதங்களும், மற்று
ஒழுக்கமும், சீவன்முத்தனுக்கு வேண்டுவ
தில்லையென்று அருளிச்செய்கின்றார்:—

தன்மமு மதன்மமுந் தன்னைச் சாரிலா
என்னிலட் டமிமுதல் விரதமென் செய
மன்னிய வுலகினி லொழுக்கமு மற்றுள
கன்மமும் விடுதலே கருமங் காணிலே.

(இ-ள்.) தன்னைத் தன்மமும் அதன்மமும்
சாரிலா என்னில் அட்டமிமுதல் விரதம்
என்செய—சீவன்முத்தனைப் புண்ணியபாவ
ங்கள் பொருந்தா; ஆகையினாலே, அட்டமி,
சதுர்த்தசி, சோமவாரம், கேதார விரதம்,
தவம், பரலோகம் அடையவேண்டுமென்
னும் புத்தி, தானம், பூசைகள், சித்தாந்த
சிரவணம், இவை முதலியவிரதங்களும் யா
துபயனைத்தர, [வேண்டுவதில்லை என்றபடி]

காணில் மன்னிய உலகினில் ஒழுக்கமு
ம மற்று உள கன்மமும் விடுதலே கருமம்
—ஆலோசிக்குமிடத்து அச்சீவன்முத்தன
நிலைபெற்ற உலக ஒழுக்கங்களையும் மற்றுமு
ள்ளனவாகிய கன்மங்களையும் விடுதலே கா
ரியம் எ-று. (ருச)

ஆசா தேவிகாலோத்தர வுரைபாடம்.

சமயாசாரங்களும், சங்கற்ப விகற்பங்களு ம், குலாசாரங்களும், சிவன் முத்தனுக்கு வேண்டாவென்று அருளிச்செய்கின்றார்:—

சமையா சார சங்கற்ப விகற்பமும்
அமையா தாங்குல வாசார மானதும்
இமையா தாரும் விடாதவில வாழ்க்கையும்
அமையார் தோளாய விடுதலா சாரமே.

(இ-ள்.) அமையார் தோளாய்—மூங்கில போலும் தோளகளையுடையாய்,

சமயா சாரம்—சமய நிட்டைக்குப்பிறகு அநுட்டிக்கும் சமயாசாரங்களும்,

சங்கற்ப விகற்பமும்—இச்சா ரூபமாயிருக்கிற மனசங்கற்பங்களும், பூர்வாவஸ்தா சாதித்தன்மாதி ஞானங்களும்,

அமையாது ஆம் குல ஆசாரம் ஆனதும்—அமைவுபெறாத குலாசாரங்களும்,

இமையா தாரும் விடாத இல வாழ்க்கையும்—இமையா நாட்டத்தையுடைய தேவர்களும் விடாத இலவாழ்க்கையும்,

விடுதல் ஆசாரம்—இங்ஙனஞ் சொல்லப்பட்ட இவைகள் எல்லாம் விடுதல் ஞானாசாரம் எ-று. ஏ-அசை. (௯௨)

அளவற்ற இன்பமாகிய சாயுச்சியத்தை விரும்பினவன் சித்திகளையும், சர்வபதார்த்தங்களையும், விடக்கடவனென்று அருளிச்செய்கின்றார்:—

கொச்சகக்கலிப்பா.

பல்வகைய சித்திகளும் பாதாளத்திற் செலவும், சொல்லரிய பொருண் முழுதுஞ் சோராமற் பெற்றிடினும், எல்லையிலா வின்பமா முத்திபெற வெண்ணுமவன், அல்லற்றருஞ் சிற்றின்ப மடையவொ வொழிவானே.

(இ-ள்.) பல்வகைய சித்திகளும — பலவகைப்பட்ட சித்திகளும,

பாதாளத்தில் செலவும — சத்த பாதாளங்களிற் செல்லுகையும,

சொல்ல அரிய பொருள்முழுதும் சோராமல் பெற்றிடினும — சொல்லுதற்கரிய இருவகை மாயையின்கட்டோன்றிய இருநூற்றுப்பத்து நாலு புவனங்களிலே உள்ள சர்வபதார்த்தங்களையும் குறைவறப் பெற்றானே ஆயினும்,

எல்லை இலா இன்பம் ஆம் முத்திபெற எண்ணுமவன் — முதல் நடு இறுதி இல்லாததாய், பிரமாநந்த சொரூபமாயிருக்கிற சி

வாக்கிய சாட்சாத்காரத்தைப் பெறவிருமா ப்பவன் முத்தன்,

அல்லல் தருமசிற றின்பம அடையா அவா ஒழிவான—துன்பத்தைத் தரும சிற்றின் பமுழுவதையும் பற்றுதல செய்யாமல் விடுவன் எ-று.

பலவகைய சித்திகளும என்றது. அட்டா ங்கயோக அப்பியாசத்தினாலே வரும பலவ கைப்பட்ட சித்திகளை, அவையாவையெனி ல், குழந்தைப பருவ முடையான் மேன்மை யைப்போல வளாத்தல, யவ்வன பருவ முடையான் கிழவனாதல, கிழவவன் யவ்வ னனாதல, நானாவித மாகிய சாதி ரூபங்க ளா யிருத்தல, நான்கு பூதங்களால தேக மெடுத்தல, நித்தியமாயிருக்கிற பரிமளத் தை நீங்காமற்பண்ணுதல, சலத்தின் மேலி ருத்தல், மண்போலிருத்தல, தண்ணீருக்கு ள்ளே எத்தனை காலமாகிலு முழுகிக்கிடத்த ல, சமுத்திரம் ஆறு குளமஆகிய இவற்றை ச சலமிலலாமற் காண்பித்தல், உள்ளங் கை யிற சமுத்திரத்தை வாங்கல, கரும்புமுதலி ய ரசவஸ்துக்களை ரசமிலலாமறபண்ணுதல், பேயக்கரும்புமுதலிய ரசமில்லாதவஸ்துக்க ளைக் கருமபுபோல ரசமுள்ளதாகப் பண்ணு

தல, மூன்று பூதங்களினால தேக மூண்டாக்க
லல, கற்களிலபாயந்தாலும ஊறுபடாமலிரு
த்தல, அக்கினியைச சுயமே உண்டாக்கல்,
அக்கினியிலே நடத்தல, அக்கினியி னாலே
வாதை யிலலாமற பண்ணுதல், தண்ணீரி
லே அக்கினியை எரியப் பண்ணுதல், அக
கினியைக கையிலேந்தல், அந்நியர் மனத
து நினைத்தது சொல்லல், பேசிககொண்டி
ருக்கையை அ[illegible] கேளாமற பண
ணுதல, அறுவகை ரசஙகளையு முண்டிரியா
[illegible]ததே ரசமறிதல், கலலைககறியமுதா
கச சமைததல், இரண்டு பூதஙகளில தேக
மெடுததல், மனோ வேகமாகச செல்லுதல,
ஆகாசரூபமா யிருத்தல, அதுநீங்கி வாயுரூ
பமாதல், அதுநீஙகித தேயுரூபமாதல், அது
நீங்கிச சலரூபமாதல, அதுநீங்கிப பிருதிவி
ரூபமாதல், இங்ஙன மாறிமாறிப பூதபேதங
[illegible], பாவத முதலான பாரஙகளையெடு
த்தல், அணுப்பரிமாணமததிய பரிமாணமக
றபரிமாணம பரமமகறபரிமாணமாதல், வா
யுவைக் கையாற பற்றுதல், ஒரு விரலாலே
பூமியைககுத்தி நடுஙகப பண்ணுதல், ஒரு
பூதமாயிருநது பயமுறுததல், நிழலைககீறித
[illegible]ததல, கண்ணுக்குத தோன்றுமற ச
[illegible]த்தல, ஆகாயததில நடத்தல, ஏககா

லந்தி ளெவிறந்த வன்மையுடனே யை யோகம் பண்ணுதல, மலைகளைக்கடத்தல், மலைகளை நடுங்கப்பண்ணுதல, ஆகாசத்தை யளாவல, மலைகளை வளரச்செய்தல, சரீரமில லாமலிருத்தல், எவ்வெவ் வுருவங்கள எவ் வெவ்விடயங்கள் வேண்டுமோ வேண்டிய படியே உண்டாக்கல், சகலத்தையும் தோ ன்றுமல் மறைத்தல, சகல ரகசியங்களையும் அறிதல, இராத்திரிபகலாதவிகங்களில எந்தக குணங்களை யாவர்க்குண்டாக்க வே ண்டுமோ அவ்வாறே உண்டாக்கல, [illegible] ரிய நிக்கிரகம பண்ணுதல், சமுசாரியாய் அநேகம் பிள்ளைகளோடும் ஸ்திரீகளோடும இருத்தல, வெட்டு அடி கட்டு இவை தன க்கிலலாமற் பண்ணுதல, மரித்தவனை யெ ழுந்து வார்த்தை சொல்லப் பண்ணல், பி னபும தேகத்தோடே கூடிச் சமுசாரியா யிருக்கச்செய்தல், கண்டகதப் பிராணனாயி ருக்கிறவனைப பிழைப்பித்தல, தேகத்தை உண்டாக்கல, இரட்சித்தல, சங்கரித்தல், இஷ்டமாயிருக்கிற எந்த அதிகாரம் பண் ணவேண்டுமோ அந்த அதிகாரத்தைப் ப ண்ணுதல், எந்தலோகத்தை உண்டாக்கவே ண்டுமோ அநத லோகத்தை உண்டாக்கல், ஓரிடத்தும் இல்லாதலோகத்தை உண்டாக்

௩௰. எல்லா நன்மைகளையும் உண்டாக்கல், எல்லாத் தீமைகளையும் உண்டாக்கல் முதலியனவாம், இங்ஙனஞ் சொல்லிய சித்திகளெல்லாம் பிருதிவி தத்துவத்திலிருக்கிற புவனங்களி லுள்ளனவாக்கு வரும் அட்டமாசித்தியின் பேதமாம், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் மனம் புத்தி ஆங்காரமென்று சொல்லப்பட்ட எட்டுத் தத்துவங்களிலு மோவவொன்றாக [illegible] சித்தியாக எட்டுத் தத்துவங்களிலும் அறுபத்து நான்கு சித்திகளுண்டு, இவ் வறுபத்துநான்கு சித்திகளையும் இவை முதலிய அளவிறந்த சித்திகளையும் சிவன்முத்தர் வேண்டார். (நீ௩)

விபுவாய்ச் சித்துருபமா யிருக்கிற சிவசாயுச்சிய மோட்சம் அட்டமாசித்தி முதலிய சகல சித்திகளினாலும் பதப் பேறுகளினாலும் உண்டாகாதென்று அருளிச் செய்கின்றார்:—

அட்டமா சித்திமுத லனைத்துள்ள பேறுகளும், கட்டமாங் கதிகட்கும் பரகதிகா ணக்கொட்டா, மட்டிலா மாலையாய் வியாபகமாயறிவாகிக், கிட்டலா காமுத்தி மற்றியற்றுக் கிடையாதே.

(இ-ள்) மட்டு உலா மாலையாய் — தேன் பொருந்திய மலர்மாலையை உடையாய்

அட்டமா சித்தி முதல அனைத்தும் உள்ள பேறுகளும் கட்டம் ஆம் கதிகள் தரும் பரத்தி காணக் கொடா — அட்டமாசித்தி முதலான சித்திகளும், சொர்க்காதி பதப்பேறுகளும், சனனமரணத்துக்கு ஏதுவாகிய துக்கங்களைக் கொடுப்பதாகும், இவை பரமசாயுச்சிய மோட்சத்தைக் கொடுப்பனவல்ல,

வியாபகம் ஆய அறிவு ஆகிய கிட்டல் அரு முத்தி இவற்றால் கிடையாது — விபுவாய், சித்துருபமாய், கிடைத்தற்கரிதாயிருக்கிற பரமமோட்சம், இங்ஙனஞ் சொல்லப்பட்ட சித்துகளினாலேயும் பதப்பேறுகளினாலேயும் கிடையாது எ-று. ஏ-மற்று-அசை. —(ருசு)

யாதொரு சமயங்களில் பிரத்தியட்சமாகச் சித்திகளுண்டாயிருக்கினும், புண்ணியஸ்தலங்களில் தெய்வீகங்கள் உண்டாயிருக்கினும், அவை பொருளல்லவென்று அறிந்து ஞானி அவற்றில் ஆசை நீங்கவேண்டுமென்று அருளிச்செய்கின்றார்:—

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

யாதொரு விடயந் தன்று லவத்தையை
யெய்தினுலும், காதலால் யோகந் தனைக்
கருத்தான பிறிதோர் தேசம், நிலைப்பீ
டந் தனினிற் சிறப்புடைத் தெனினுஞ் சித்
தத்த, நாத்தவை யடையு மாசை யடையாம
லாக்கிக் கொள்வான்.

(இ-ள்.) யாதொரு விடயந் தன்றால் அ
வத்தையை எய்தினுலும்—ஞானக் கண்ணி
னை உடையோர், எந்தெந்த விடயங்களினு
ல் பிரத்தியட்சப் பலன்களைக் கொடுப்பதா
கிய சாவசித்தி அவத்தைகளை அடைந்திரு
ந்தாலும்,

காதலால் யோகந் தனைக் கருத்தான
விருப்பத்தினால் சத்தியஞான அநந்தாந
ந்த சிவயோக சிந்தனையை உடைய சிவ
ஞானி

பிறிதோர் தேசம் நிலைப்பீடந் தன
னில் சிறப்பு உடைத்து எனினும் சித்தத்தா
லவை அடையும் ஆசை அடையாமல் ஆக்
கிக் கொள்வான்—வேறொரு புண்ணிய ஸ்த
லங்களிலும், சூற்றமற்ற அந்தந்தத் தலங்க
ளிலிருக்கும் திவ்விய இலிங்கங்களிலும் சிற
ப்புடையதெனின், உள்ளத்தின்கண் ஆசை

உண்டாம்; உண்டாயின், விடலாமோ விட
லாகாதோ என்று சந்தேகப்படாமல், அவ
வாசையில் நின்றும் சித்தத்தைத் திருப்பிக்
கொள்ளா ள-று. (௫௫)

சிவன் முதத்தனவன் சராசரமாயுள்ள
சகல சீவன்களிடத்தும் அகிதஞ்செய்யாம
ல் அன்புவைப்பதே சிறப்பென்று அருளிச்
செய்கின்றார்:

அரியமா குழலாய் வீட்டை யடையவே
கருது நல்லோர், செளிவன பறப்ப ஊர்வ
நிற்பன முதல வாகிக், களியுடை யுயிர்கட்
கு துன்பஞ் காணலா வாழ்க்கை யாளும்,
அளியினு லருளை யென்று மாக்குவ தழகி
தா மால்.

(இ-ள.) அளி அமா குழலாய்—புட்பங்
களிலுலே வண்டுகள் விரும்பி மொய்க்கின்
ற அளகத்தை உடையாளே,

வீட்டை அடையவே கருதும் நல்லோர்
—மோட்சத்தையே அடைய விரும்பிய நல்
லோர்கள்,

செளிவன பறப்ப ஊர்வ நிற்பன முதல
ஆகி—வோவையினுல் உண்டாகும் கிருமி
யும் ஒருகணத்திறமேன்றி ஒருகணத்தில

ரிக்கும் கடமும், விடாப் பறையும், ஊ
ரவமும், காவாகங்களும் முதலியனவாய,
சரீரமுடை உயிர்க்குத் துன்பம் காண்கி
லா வாழ்க்கை ஆகலால் — சரீரமுடைய
உயிர்களுக்குத் துன்பஞ்செய்யாமல் வாழ்
தலே முறைமையாயின,

என்றும் அசரீரருளை ஆக்குவது
அழகிது ஆம் — நாடோறும் அன்பினாலே
உயிர்களிடத்து கிருபை வைப்பதே சிறப்
பாகும் எ-று. ஆல்-அசை. (௩௯)

சீவன் முத்தன் சீவ இம்சையின்றிச் சிவ
பெருமானைப் பூசிக்கவேண்டுமென, உதிர்ந்த ம
லர்களை எடுத்து அருச்சிக்க வேண்டுமென்று
அருளிச்செய்கின்றார்:—

கொச்சகக்கலிப்பா.

நடுங்காமல் வெவ்வுயிரு நலுக்காமற் றுரும்
பினைத்தும், பிடுங்காது முதலிலையும் பிர
சமலர் கொய்யாது, விடுங்காலா ழூழ்த்து
வீழ்ந்த விரைமலர்க ளவையேந்தி, அடிங்கா
லன்றனையட்ட வம்புயங்க ளர்ச்சிப்பான்.

(இ-ள்.) எவ்வுயிரும் நடுங்காமல் துரும்
பனைத்தும் நலுக்காமல் — சாவான்மாக்க
ளும் அஞ்சாதபடி திரணசேதம் பத்திரச்சே
தம் பண்ணாமல்,

முதலா னவையும் பிடுங்காது—முதலோடு யாதொரு செடி கொடி பூண்டு முதலிய னவற்றையும் பிடுங்காமல்,

பிரசு மலர் கொய்யாது — தேனபொருந்திய மலர்களைக் கிள்ளாமல்,

விடும காலால ஊழுந்து உதிர்ந்த விளை மலர்கள் அவை எந்தி—விசுங்காற்றால மலர்ந்து உதிர்ந்து கிடக்கிற மணமுள்ள மலர்களை எடுத்து,

அடிம காலை றனே அடட அமபுயங்கள அருச்சிப்பான—சாவ பிராணிகளையுங் கொல்லுதலாற நமனை நிக்கிரகம பண்ணிய சிவந்த தாமரை மலர்போன்ற திருவடிகளை யருச்சிப்பார் எ-று. (கூள)

சிவன முக்கணனவன மாரண முதலா அட்ட கன்மங்களையும் விட்டுவிடவென்று அருளிச்செய்கின்றார்:--

கலிவிருத்தம்.

பிணக்கக் கமபனை போக்க லுயிர்க கொலை
இணக்கம் பூத பசாசுவெப பேற்றுதல்
புணர்க்கும வசியம போமாவ ரன்மையல
வணக்கங் தாவரஙகு தநதிர மாற்றுவால்.

(இ-ள்.) பிணக்கம — வித்துவேஷணமா
யுப் பகை செய்வித்தலும்,

தம்பனை — பூதபிரேத பசாசுகளைத் தம்ப
னஞ்செய்து கட்டுதலும்,

பேர்த்தல உயிர்க்கொலை இணக்கம் — பூத
பிரேத பசாசுகளை ஓட்டுவதாகிய உச்சாட
ணமும், கொலைத் தொழிலாகிய மாரணமு
ம் செய்ய இணங்குதலும்,

பூதம பசாசு ஏவப்பு ஏறுதல — முன்
சொன்ன பூதபிரேத பசாசுகளையும், சுரமு
தலிய வியாதிகளையும், ஆவேசம்பண்ணுவி
த்தலும்,

புணர்க்கும்வசியம் போருவரல — பெ
ருத்தும் வசீகரத்திருலே வேண்டாதவா
வரமாகி அழைத்தலும்,

மையல — மோகனமும்;

வணக்கம் தாவரம குத்திரம் மாறுவ
ன் — வேர் முதலான பூண்டுகளினால் குளிசப
பணணுதலும், இப்படிப்பட்ட அட்டகன்
மங்களாகிய குத்திர கன்மங்களை ஞானியான
வுன் பண்ணுதொழிலன் எ-று. (ரு அ

சீவன் முத்தன் சர்வ பதார்த்தங்களினும் ஆசையின்றிச சமதிருஷ்டி பண்ணுவனென் என்று அருளிச்செய்கின்றார்:—

கொச்சககலிப்பா.

ஆசையினை யறவிட்டெப் பொருட்கு மொத்துச சுகதுக்கம், பேசியநட் டார்ப கைஞர் பீடுடையோர் பீடிலலோர், மாசி லொளி வளருமணி காஞ்சனங்கல் லோட டினினும, நேசமறப் பார்த்துணர்ந்து சம நிலத்தே நிலைநிறபான்.

(இ-ள்.) ஆசையிலே அறவிட்டு எப்பொ ருட்கும் ஒத்து — சீவன்முத்தன் பிரவஞ்ச ததின்கணுள்ள ஆசையைப் பற்ற விட்டு + சாவ பதார்த்தங்களிலுஞ் சம திருட்டிப ண்ணி,

சுகதுக்கம்—சுகதுக்கம் வந்த விடத்தும்,

பேசிய நட்டார் பகைஞர் — சொல்லப்ப ட்ட சிநேகரிடத்தும பகைவரிடத்தும்,

பீடு உடையோர் பீடு இல்லோர்—பெரு மை உடையவர்களிடத்தும் பெருமை இல் லாதவர்களிடத்தும்,

மாசு இல ஒளிவளரும மணிகாஞ்சனம் கல ஓட்டினினும்—குற்றமற்ற ஒளி வளரா

யின்றி நவரத்தினம் பொன் கல் ஓடு ஆகிய இவற்றினிடத்தும்,

நேசமும் அறப் பார்த்து உணர்ந்து சுய நிலத்தே நிலை நிற்பான் — விருப்பம் இல்லா மல் பார்த்தறிந்து சதாகாலமும் கேவலசகலந் தாக்காமல் சுத்தாவத்தையில் நிற்பவ னென்று. (நிகூ)

சிவஞானி சுகதுக்கங்களையு நீங்கி, பிறவகுசத்திலே அதிசயமும் பயமும் இன்றி, தேவர்களாலும் அறிய வொண்ணாத பரமசுகத்தைப் பொருந்தி இருப்பனென்று அருளிச் செய்கின்றார்:—

கலிவிருத்தம்.

யோகி யாகி யொழுகு மியல்பினோன்
போக மாற்றிப் பொருண்மேற் புலன்களை
வேகமாய பயமும் வியப்பும் போய
மாகா சுச்சை சுகத்தை மருவுவான.

(இ-ள்.) யோகி ஆகி ஒழுகும் இயல்பினோன் — சிவயோகியாய்ச் சஞ்சரிக்கும் இயல்பினை உடைய சிவஞானியானவன்,

புலன்களைப் பொருண்மேல் (மாற்றி) — இந்திரியங்களை விடயங்களிற் செல்லாமல் தடுத்து

போகம் மாற்றி — மாயா போகத்தின்கண் உண்டான இச்சையை நீக்கி,

வேகம் ஆய பயமும் வியப்பும் போய — பயமுஞ் சந்தேகத்தினாலே அதிவேகமா யிருக்கிற் பயமுங் கொண்டாட்டமு நீங்கி,

பாசம் காணுத ஏகத்தை மருவுவான் — தேவாசுரர்களாலும் காணப்படாத நிர்மல நித்த சுத்த நிருதிசயமாகிய பரசிவத்தை அடைவான் என்றவாறு. (௯௦)

சர்வ பிராணிகளையுந் தன்னைப்போற் கருதி, இகழ்வார் புகழ்வா ரிடத்துஞ் சமபுத்தியினை யுடைய சிவஞானியே சிவபூசை சொன்ன ஞானாசாரம் எல்லாம் உடையவ னென்று அருளிச்செய்கின்றார்:—

கொச்சகக்கலிப்பா.

தனக்கினிய னாமவகையே சராசரங்க ளனைத்தினையும், நினைத்திகழ்வார் புகழ்வார்பா லொத்திருக்கு நிலைமையினை, மனத்துடையா னெவனவன் யாமுரைத்த வாசாரம், அனைத்துடைய னாகவறி வெறியமரு மைம்பாலாய்.

(இ-ள்.) வெறி அமரும் ஐம்பாலாய — வாசனைதங்கிய கூந்தலை யுடையாளே,

தனக்கு இனியன் ஆம் வகைபோ—தனக்குத் தானினியனா யிருக்குந் தன்மையே போல,

சராசரங்கள் அனைத்தினையும் நினைத்து இகழ்வார் புகழ்வார்பால் ஒத்திருக்கும் நீர்மையின் மனத்து உடையன் ஆன அவன்— சராசரமாயுள்ள சர்வ பிராணிகளிடத்துங் கிருபை உடையனாய், தன்னை இகழ்பவர்களிடத்தும் புகழ்பவர்களிடத்தும் சமபுத்தி உடையவனா யிருப்பவன்,

யாம் உரைத்த ஆசாரம் அனைத்து உடையன் ஆக ஆம்— நாம் சொல்லிய ஞானசாரங்கள் எல்லாவற்றையும் உடையவன் அவனே என்று அறிவாயாக எ-று. (௯௧)

ஞானியானவன் தாக்கவாதமே முதலாய பயனற்ற வியாபாரங்களை நீங்கி இருப்பனென்று அருளிச்செய்கின்றார்:—

கலிநிலைத்துறை.

வாதுரை பயனில சொல்லும் பிறருடன்
மகிழ்ந்திருத்தல, பேதுறு பிணக்க நீங்கிய
பெரியவ னருளினாலே, ஓதுநூ லோத லோவி
யுல்கினி னன்றுதீதென், றோதியி லுரைத்
தெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான்.

(இ-ள்) வாது உரை—பிறரை வெல்லவேண்டும் என்று அதற்கு ஏற்றவார்த்தை சொல்லுதலாகிய வாதமும், சுவயமதஸ்தாபனமும் பரமத தூஷணமும் ஆகிய செறபமும். தூஷணமுஞ் சுவயமதஸ்தாபனமும பண்ணுது, பரமததூஷணம பண்ணும் விதண்டையும ஆகிய தாக்கவசனங்களையும,

பயன் இல சொலலும் — பிரயோசன மற்ற வசனங்களையும,

பிறருடன் மகிழ்ந்திருத்தல — உலகத்தாரோடு கூடிப் பிரியமா யிருத்தலையும்,

பேதுறு பிணக்கம் — உலக வியாபாரமாகிய பிணக்குகளையும,

நீங்கி—விட்டு,

ஓது நூல் ஓதல் ஒவி — நிரீசுரசாங்கியமுஞ் சேசுர சாங்கியம வைதீகம் அவைதீகம் ஏகான்மவாதம அநேகான்மவாதம வியாபகம அவ்வியாபகம என்று இங்ஙனஞ் சொலலப்பட்ட சாத்திரகோஷ்டிகளையும விட்டு,

உலகினில் நன்று தீது என்று ஆதியில் உரைத்தது எல்லாம் அறவிட்டு—பிரவஞ்சத்திற் சுபாஷிதம் குபாஷிதமாக, முன்சொல

லப்பட்ட வார்த்தைகள் எல்லாம் பறந்துவிட்டு,

அருளினாலே பெரியவன் அமர்ந்து இருப்பான்—கிருபையினாலே பெரிய சிவஞானியானவன் நிருவிகற்ப சமாதியில் அமைவாக இருப்பான் எ-று. ஏ-அசை. (௬௨)

பாகியத்தில விடத்தக்க குணங்களைக்கூறி அந்தரங்கத்தில விடத்தக்க குணங்களை அருளிச்செய்கின்றார்:—

சலிவிருத்தம்.

ஆசை கோபம் பயஞ்சோக ராகமாம
மாசு மட்டசியுள வோராக்க மாறுமை
பேசு நீமை பிறாகருத் தமககிலாத
தேசி முகருடன் நீவார சிறந்தவா

(இ-ள்.) ஆசை—சர்வ பதார்த்தங்களிலே யனபபறறும,

கோபம—குரோதமும,

பயம—அச்சமும,

சோகம்—துக்கமும்,

இராகம் ஆம் மாசு—பெண்ணாசையாகிய குற்றமும்,

மாட்சி உள்ளோர் ஆக்கம் ஆற்றாமை — பெருமை உடையார் செல்வங்கண்டு பொறாமையும்,

பிறர்க்குப் பேசுதீமை — பிறர் மேற் கோட் சொல்லுதலும்,

தமக்கு இலாத தேசு — தமக்கில்லாத கீர்த்தியை விரும்புதலும்.

இழுக்குடன் நீவார் சிறந்தவர் — இங்ஙனஞ் சொல்லப்பட்ட குற்றங்களெல்லாவற்றையும் விட்டு விடுவார்கள் சிறப்பினையுடைய சிவஞானிகள், எ-று. (௩௬)

சிவானுபூதி விளங்காத ஞானசாதகருக்கு மாயாபோகத்தில் இச்சை உண்டாம் என்று அருளிச்செய்கின்றார்:—

கொச்சகக்கலிப்பா.

பொருண்முழுதும் விட்டிடும்பு பொருள்
சாரா வறப் போவார், இருளறுஞா னப
விளங்கி யப்பொருளு மறிவாராய், இருவி
னைவீ டறிவாலே யிடாப்பிறவென் றறிந்தாலு
ம், மருளாதுறும் போகத்து மனம் வைப்பார்
சாதகர்தாம்.

(இ-ள்.) பொருள்முழுதும் விட்டு — புண்ணியபாவம், சுகதுக்கம், விருப்பு வெறுப்பு,

பரிதாகம், சிநோஜைம், புகழ்ச்சி இகழ்ச்சி, லாப லோபம், வைராக்கியம் அவைராக்கியம், ஐசுவரியம் அனைசுவரியம், ஞானம் அஞ்ஞானமென்று சொல்லப்பட்ட மாயா தோற்றங்களாகிய சாவோபாதியும் விட்டு நீங்கி,

சார்வுஅற — சனங்களோடு கூட்டரவில்லாமல் ஏகாந்தியாய்,

இருள்அற ஞானம் விளங்கி — நின்மல செருச சொரூபஞானம் பிரகாசித்து,

எப்பொருளும் அறிவார்ஆய — சர்வஞ்ஞராய்,

உடம்பு பொருந்தும் — எடுத்த சரீரத்திலே தானே வாராநிற்கும்,

போவார்— ராயுச்சிய மடையப் போவார் (ஆயினும்.)

இருவினைவீடு அறிவாலே இடாபிற என்று அறிந்தாலும் மருளாது உறும் போகத்து மனம் வைப்பார் சாதகர்—புண்ணிய பாவங்களும், அதனாலே வருஞ் சுகதுக்கங்களும், மோட்ச இயல்பும், போகத்தில் இச்சையும் ஆகிய இவை எல்லாம் பிறவித்துன்பத்துக் கேதுவென் றறிந்தாலும், மயக்கத்தை உ

மைடய மாயாபோகத்தில் மனம் வையாமல்
ற்பர சிவானுபூதி விளங்காமல ஞானோபா
யத்தைச சாதிக்கிற சாதகா, எ-று. தாம
அசை. (கூசு)

மோட்சமே முக்கிய பலமென் றெண்ணி
அதிலே ஏகாக்கிர சித்தராயப் பிரவிர்த்தி
பண்ணுகிற மோட்ச சாதகருககு அணிமா
முதலாயுள்ள சித்திகளில் ஆசை உசிதமன
று, மோட்சமே முககியமெனறு அருளிச
செயகினறார்:—

கலிவிருத்தம்.

விட்டு மேலாம பதத்தினை மேவுவோாக
கட்டமா சிததி வநதுறும வாராதேல
கட்ட மான கதியைக கடந்தவா
எட்டா முததி தனனையே யெய்வரால

(இ-ள்.) விட்டுமேலாம பதத்தினை மேவு
வோாககு—சர்வோ பாதிகளையும விட்டு நீ
ஙகி மேலாகிய சிவ சாயுசசியததை அடை
யும சிவஞானிகளுககு,

அட்டமா சிததி வந்து உறும்—இடையி
ல, அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிரா
ாத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவ
மென்று சொலலப்பட்ட அட்டமா சித்தி
முதலான சிததிகள்வரும,

யாராதேல—யாராதொழியும் ஆயினும்,

அட்டம ஆனகதியைக் கடந்தவா—சனன மரண, துக்க ஏதுவான அனுபவத்தை விளைக்கும் அட்டமாசித்தி முதலிய சகல சித்திகளையும், சகல பதார்த்தங்களையும், பொருளல்லவென்று விட்டுநீங்கிய சிவஞானிகள்,

எட்டிடாமுத்தி தன்னையே எய்வர் — மனோவாக்குக் காயங்களுக்குக் கெட்டாததாய். உன் மனோந்நமாயப் பரமாயிருக்கும் சாயுச்சியத்தையே அடைவர் எ - று. ஆல - அசை. (௩௫)

பஞ்சபூத காரியமாயிருக்கிற சரீரத்தில சிவனிருப்ப மென்றும், சர்வபிரபஞ்சமும் சிவசொரூப மென்றும், அருளிச்செய்கின்றார்:—

கொச்சகக்கலிப்பா.

ஐவகைய பூதகாரிய மென்னு மவ்வுடம்பி
ல, மெய்வகையா றுஞ் சிவனிற்கு ஞ் சிவமுத
லா மேதினியி, னிவ்வகைய வுலகங்க ளனைத்
தினையு மிறையுருவென், றுய்வகையா லுண
ர்ந்தானே யுமையுணர்ந்தா னுமைகேணீ.

(இ-ள்.) உமைநீ கேள்—பார்வதியே நீ கேட்பாயாக,

இவ்வையம் பூத காரியம் என்றும் அவற்றுட
ம்பில் மெய்வகை ஆம் சிவன் நிற்கும்—பஞ்
சபூத காரியமாயிருக்கிற இந்தச் சரீரத்தி
லே உண்மையாகிய சிவபெருமானே இருப்
பார் (ஆதலால்),

சிவம் முதல் ஆம் மேதினி ஈறு இவ்வகை
ய உலகங்கள் அனைத்தினும் இறை உரு
என்று—சிவதத்துவமுதல் பிருதிவித்தத்துவ
முடிவாயுள்ள முப்பத்தாறு தத்துவங்களி
னுமுள்ள இருநூற்றிருபத்துநாலு புவனங்
களையும் சிவசொரூபமே என்று,

உய்வகை ஆ உணர்ந்தானே எமை உண
ர்ந்தான்—பிழைக்கும் பொருட்டாக இவ்
வாறே சர்வமும் நம்முடைய சொரூபமாக
யாவனொருவன் அறிந்தான், அவனே நம
மையறிந்தவன் என்று.

இருநூற்றிருபத்துநாலு புவனமும் சிவ
சொரூபம் என்றது சிவதத்துவமுதல் பி
ருதிவி தத்துவமுடிவாயுள்ள முப்பத்தாறு
தத்துவங்களுக்குள்ளே சற்றும் சேஷியாம
ல் உள்ளும் புறமும் பரமசிவ அதிட்டான
மே ஆதலின், இதற்கு (உ-ம்.) சிவதருமோ
த்தரம். "சிவனறனைக் கவனியந்தருஞ் செகம
தி நூலதேகம், அவனுடற் றூலமாயூர் முரு

பிரவாகத்து நரகம், பலவாறனைக் குயிர்க்கு
ப்படியாற பாரபனா பாமருகம்" என்பதனை
க் கண்டுகொள்க. (௯௯)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட மோட்ச சாத
கமாகிய சிவஞானத்தை உலகத்தாரால் உபச
ரிக்கப்படுமாறு—சுபபிரயோசனத்தைச் சா
திப்பதற்கு அன்றென்று, இரண்டு திருவிரு
த்தத்தால் அருளிச்செய்கின்றார்:—

இவ்வகைய ஞானிதனக் கிருநிலத்தோர்
கந்தபுட்பம், செய்வகைய பலந்தூபம் புன
லாடை விளக்கமுது, செய்வகைய மனவா
க்குக் காயத்தாற் பூசைசெய்தால், அவ்வ
கைய வுடம்பொடே வேண்டுமுத்தி யடை
வரால்.

(இ-ள்.) இவ்வகைய ஞானி தனக்கு—இ
ப்படிப்பட்ட சிவாநந்திய சாட்சாத்காரமா
யிருக்கின்ற சிவஞானிக்கு,

இருநிலத்தோர் — பெரிய பூமியின்கண்
உள்ளார்,

புனல் ஆடை விளக்கு கந்த புட்பம் செ
ய்வகைய பலம் அமுது தூபம் மனம் வாக்
குக் காயத்தால் செய்வகைய பூசைசெய்தா
—ஸ்நானம் பண்ணுவித்து, பரிவட்டஞ்

சாத்தி, சந்நிதியில் திருவிளக்கிட்டு, திரு
மேற் பூச்சு கந்தங்களும் திருமாலைகளும் சூ
த்தி, உண்மையின் பாற்பட்ட முப்பழங்களு
டனே திருவமுது படைத்து, தூபதீபங் ப
ண்ணிமாறி மனோவாக்குக் காயங்களாற் செ
ய்யும் வகையினதாகிய சோடசோபசாரத்
தோடு பூசை பண்ணினால்,

அவ்வகைய உடம்புடனே வேண்டு முத்
தி அடைவார் — இங்ஙனஞ் செய்தவர் அந்
தச் சரீரத்தோ டானே எந்த முத்தியை
விரும்பினார்களோ, அந்த முத்தியை யடை
வார்கள் எ-று. ஆல்-அசை. (கஎ)

கலிவிருத்தம்.

சொன்ன ஞானி தனைத்துதி செய்தவர்
முன்னஞ் செய்யற முற்று மடைகுவர்
இன்னல் சொன்னவ ரெய்துவர் வன்பவ
அன்ன பவ ரசைவிஞ் ஞானனுஞ் சேர்வர்.

(இ-ள்.) சொன்ன ஞானிதனைத் துதிசெ
ய்தவர் முன்னம் செய் அறம் முற்றும் அ
டைவார்கள் — இங்ஙனஞ் சொல்லப் பட்ட
சிவஞானியை யாவரொருவர் துதிசெய்த
னர் அவர் சிவஞான மடைதற் கேற்ற முன்
னர்ச்செய்த புண்ணிய பலன முற்றும் அ
டைவர்,

இன்னல் சொன்னவர் வன்பவம் எய்து
வர்—துன்பமுண்டாக நிந்தனை பண்ணினவ
ர்கள் அநுபவித்தற்குக் கேதுவாகிய பிறப்பி
னை அடைவர்,

அன்னம் ஈபவர் ஆசையில் ஞானம் சேர்
வார்—திருவமுது செய்விப்பவர்கள் ஆசை
யற்ற சிவஞானத்தைப் பெறுவர்கள் என்று.

பார்வதியார் ஞானோ சாரங்களைச் சங்கிரகி
த்துக்கேட்டருள, சிவபெ[illegible]னை நன்றாகத்
[illegible]ம்பற்ற, அதற்குற்ற சர்[illegible]தாவதமடை
[illegible]க்கும் உமாதேவியாரை நோக்கி, ஞா
[illegible]த்தைச் சொல்லிய இந்த நூலின் மு
[illegible]விச் செய்கின்றார்:—

[illegible]ச்சகக்கலிப்பா.

[illegible]ன்று [illegible] ஞானநு[illegible]வெ
[illegible], என[illegible] [illegible]ஞானத்தை யீட
ம்பின்றால், மி[illegible] [illegible]டயாயின்
யுனக்கு மீண்டித்தனை, [illegible] செ
ய்தத்துவ தனைத்தினையுரு

(இ-ள்.) மின் ஆரும் நுண் இடை
மின்போலும் நுண்ணிய இடையினை[illegible]
யர்ளே,

முன்சொன்ன ஞானமுடன் ஆசார முடிவு ல்லாம் என்றதிலே இக்கால ஞானத்தைத் தியம்பினது — முந்திச் சொல்லப்பட்ட ஞானமும், ஞானாசாரத்தினுடைய முடிவும் ஆதியபாரியாககாலத்திலே உண்டாகும் ஞானாநுபவமாலே சொல்லப்பட்டது, அன்றியும்,

சொல்லத்தகுவது அனைத்தினையும் சொன்னேம், இன்றி இனி உனக்கு இதனைச் சொனாலென — சொல்லத்தக்க எல்லாவற்றையுஞ் சொன்னேம். ஆதலால், மீண்டும் இனி உனக்கு இதனைச் சொல்லப்புகின் சொல்லத்தக்கதியாது, (ஒன்றும் இல்லை என்றபடி) எ-று. ஆல்-அசை. (௬௪)

தேவிகாலோத்தர வுரைபாடம்

முற்றிற்று.

மெய்கண்டதேவன் திருவடி வாழ்க.